விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 பங்குனி 21 வெள்ளிக்கிழமை (03.04.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 105




# வன்னி மக்களின் அவல நிலை குறித்து சொல்ஹெய்முக்கு நடேசன் விபரிப்பு

## போர் நிறுத்தத்துக்கும் வலியுறுத்தல்





(ஒஸ்லோ)

அரசாங்கத்தால் வன்னியில் முன்னெடுக்கப்பட்டுவரும் படை நடவடிக்கை காரணமாக பாதிப்படைந்துள்ள வன்னி மக்களின் நிலை தொடர்பாக நோர்வே அமைச்சரும் இலங்கைக்கான முன்னாள் சமாதானத் தூதுவருமான எரிக் சொல்ஹெய்ம், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசனுடன் நேற்று முன்தினம் மாலை தொலைபேசியில் தொடர்பு கொண்டு உரையாடியுள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்புக்குள் 16 கரும்புலிகள்

### அமைச்சர்களுக்கு ஜனாதிபதி எச்சரிக்கை


(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தற்கொலைப் போராளிகள் 16 பேர் ஏற்கனவே கொழும்புக்குள் நுழைந்திருப்ப தாக புலனாய்வுத் தகவல்கள் கிடைத்திருப்பதாக தெரிவித் துள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இதனால் அமைச்சர்கள் அனைவரும் விழிப்புடன் இருக்க வேண்டும் எனவும் எச்சரித்திருக்கிறார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தின் போதே ஜனாதிபதி, அமைச்சர்கள் அனைவருக்கும் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

எதிர்வரும் 25-ம் திகதி மேல் மாகாண சபைத் தேர்தல் நடைபெறவிருக்கின்ற போதிலும் இந்த தேர்தலை முன்னிட்டு நடத்தப்படும் பிரசாரக் (12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை இனப்பிரச்சினை தீர்வுக்கு தொடர்ந்தும் அமெ. வலியுறுத்தும்



### ஹிலாரி கிளின்டன் தெரிவிப்பு

(வாஷிங்டன்)

இலங்கை இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வுகள் முன்னெடுக்கப் படவேண்டுமென இலங்கை அரசை தாம் வலியுறுத்தி வருவதாக அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளிங்டன் அமெரிக்க காங்கிரஸ்வாதியான மேரி ஜோ கில்ரோயிக்கு கடிதம் மூலம் பதிலளித்துள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)

## 22 லொறிகளில் உணவுப் பொருட்கள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைப்பு

(கொழும்பு)

கொழும்பிலிருந்து ஏ-9 பாதையூடாக 22 லொறிகளில் தனியார் வர்த்தகர்களுக்கு நேற்று பொருட்கள் அனுப்பி வைத்துள்ள தாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

இது தொடர்பில் யாழ்.அரச அதிபர் க. கணேஷ் மேலும் தெரிவிக்கையில், தனியார் வர்த்தகர்களினால் சோடா, சொக்லேட், பிஸ்கட் வகைகள், சைக்கிள் ரயர்கள், ரியூப்கள் மற்றும் புடைவைகள் என்பன ஏ-9 பாதையூடாக அனுப்பி வைக்க கொழும்பில் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இப்பொருட்கள் நேற்று 22 லொறிகளில் ஏ-9 பாதையூடாக (12ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் 2 நாட்களில் 64 பேர் எறிகணையில் சிக்கி உயிரிழப்பு

(வவுனியா)

வன்னியில் நேற்றும் நேற்றுமுன் தினமும் மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதல்களில் 17 சிறுவர்கள் உட்பட 64 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர்.

வன்னியில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதல்களில் 17 சிறுவர்கள் உட்பட 39 தமிழர்கள் உயிரிழந்துள்ளனர்.113 பேர் படுகாயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டது.

மக்கள் பாதுகாப்பு வலய பகுதியான மாத்தளன், வலைஞர்மடம் மற்றும் அம்பலவன் பொக்கணைப் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை தொடக்கம் (12ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிப் போரில் சிக்கியுள்ள மக்களை ஆபத்திலிருந்து பாதுகாக்க வேண்டும்

### பிரித்தானியா வலியுறுத்தல்

(லண்டன்)

வன்னியில் போரின் பிடியில் சிக்கியுள்ள மக்களின் நிலை தொடர்பாகவே தாம் அதிகளவில் அக்கறைப்படுவதாகத் தெரிவித்திருக்கும் பிரித்தானியாவின் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய நாடுகளின் விவகார அமைச்சர் டேவிட் மிலிபான்ட், இந்த ஆபத்தான நிலைமையில் இருந்து மக்கள் பாதுகாக்கப்படவேண்டும் எனவும் வலியுறுத்தியிருக்கின்றார்.

பிரித்தானிய நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை (12ஆம் பக்கம் பார்க்க)

## பழமாத்தளன் கடலில் இரு தரப்பும் மோதல்

(கொழும்பு)

முல்லைத்தீவு பழமாத்தளன் கடற்பரப்பில் நேற்று முன்தினம் காலை 11 மணியளவில் விடுதலைப் புலிகளின் இரண்டு படகுகளை அவதானித்த கடற்படையினர் அவற்றின் மீது நடத்திய தாக்குதலில் ஒரு படகு மூழ்கடிக்கப்பட்டதாகவும் மற்றைய படகு ஆழ் கடலை நோக்கி தப்பிச் சென்று விட்டதாகவும் இராணுவத் (12 ஆம் பக்கம் பார்க்க)



## புலிகளை 30 நிமிடத்தில் அழித்துவிட முடியும்!

### பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளை அழிக்க எங்களுக்கு அரை மணிநேரம் போதும். ஆனால் அவர்கள் வசம் உள்ள அப்பாவி பொது மக்களின் நிலையைக் கருத்திற் கொள்ள வேண்டியுள்ளது என்று கூறியுள்ளார் பிரதமர் ரட்ணசிறி (12 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு வந்துள்ள ஐ.நா. பிரதிநிதி நலன்புரி நிலையங்களுக்குச் செல்வார்

(கொழும்பு)

நான்கு நாள் பயணத்தினை மேற்கொண்டு கொழும்புக்கு நேற்று வருகை தந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் கீழ் செயற்படும் இடம்பெயர்ந்தோரின் மனித உரிமைகளுக்கான அமைப்பின் செயலாளரின் பிரதிநிதி வோல்டர் கீலின் வவுனியாவுக்கு பயணம் செய்து வன்னியில் இருந்து இடம்பெயர்ந்தவர்களின் நிலைமைகள் தொடர்பாக முக்கியமாக ஆராய்வார் எனத் தெரிவிக்கப்பட்டது.

அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் கொழும்பு வந்த இவர் இடம்பெயர்ந்த மக்களின் தேவைகள் எவ்வாறு கவனிக்கப் படுகின்றன என்பதையிட்டும் (12ஆம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# அனுமதியின்றி இலங்கைக்குள் நுழையும் கப்பல் மீது தாக்குதல் நடத்தப்படும்

## கடற்படை எச்சரிக்கை

உரிய அனுமதியின்றி சட்டவிரோதமாக இலங்கையின் கடற்பரப்புக்குள் நுழையும் எந்தக் கப்பல்கள் மீதும் தாக்குதல் நடத்தப்படும் என இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

வன்னியில் பாதிக்கப்பட்டிருக்கும் தமிழ் மக்களுக்கு உதவி வழங்கும் நோக்கில், புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களிடம் சேகரிக்கப்படும் நிவாரண பொருட்களை ஏற்றிக் கொண்டு கப்பல் ஒன்று விரைவில் இலங்கையை நோக்கி புறப்பட விருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இவ்வாறு தகவல்கள் வெளியாகியுள்ள நிலையிலேயே சட்டவிரோதமாக இலங்கைக்குள் நுழையும் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் என கடற்படை எச்சரித்துள்ளது.

பிரித்தானியாவில் உள்ள பல்வேறு நலன்புரி அமைப்புகள் இணைந்து வன்னியில் பாதிக்கப்பட்டிருக்கும் தமிழ் மக்களுக்கு வழங்குவதற்காக பிரித்தானியாவில் நிவாரணப் பொருட்களை சேகரித்து இலங்கைக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளன.

இவ்வாறு சேகரிக்கப்பட்ட நிவாரணப் பொருட்கள் அக்ட் நௌவ் அமைப்பின் உதவியுடன் கப்பலில் ஏற்றப்பட்டுவருவதாக தெரிய வருகிறது. இந்தக் கப்பல் இம்மாதம் இலங்கையை நோக்கிபுறப்படவிருப்பதாக அந்த அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

அதேநேரம் பொதுமக்களுக்கான நிவாரணம் என்ற போர்வையில் விடுதலைப் புலிகளுக்கு வழங்குவதற்காக 2ஆயிரம் மெற்றிக்தொன் உணவுப்பொருட்களை ஏற்றிக்கொண்டு கப்பல் ஒன்று இலங்கையை நோக்கி புறப்பட்ட விருப்பதாகவும், இந்தக்கப்பல் குறித்து அவதானத்துடன் இருப்பதாகவும் இலங்கை கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கை கடல் எல்லைக்குள் அனுமதி இன்றி சட்டவிரோதமாக நுழையும் கப்பல் மீது தாக்குதல் நடத்தப்படும் என பெயர் குறிப்படவிரும்பாத கடற்படை பேச்சாளர் ஒருவர் கொழும்பு ஊடகம் ஒன்றிடம் கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகளுக்கான நிவாரண பொருட்களை ஏற்றிச் செல்லும் எந்த வொரு கப்பலையும் தடுத்து நிறுத்தும் நோக்கில் கடற்படையினர் தனது பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளனர் என அவர் தெரிவித்தார். (எ-5)

# பச்சைபுல்மூடை படையினர் வசம்

புதுக்குடியிருப்புக்கு கிழக்காக அமைந்துள்ள பச்சைப்புல்மூடை பிரதேசத்தை இராணுவத்தினர் நேற்று முன்தினம் கைப்பற்றியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இப்பிரதேசத்தில் புலிகளுக்கெதிரான தாக்குதல்களை மேற்கொண்டு வரும் இராணுவத்தின் 58ஆவது படைப் பிரிவினர் நேற்று முன் தினம் பிற்பகல் பச்சைபுல்மூடையை தமது பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இப்பகுதியில் படையினர் நடத்திய தேடுதலின் போது விடுதலைப் புலிகளின் 19 உடல்களையும் 19 ரி-56 ரக துப்பாக்கிகள் உட்பட சில ஆயுதங்களையும் கைப்பற்றியுள்ளதாக அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது. (எ-1)

# தமிழர்களை இணையத் தளத்தின் மூலம் பதியும் நடவடிக்கை நேற்று ஆரம்பம்

வடக்கு-கிழக்குப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து தென்பகுதிக்கு வந்துள்ள தமிழர்களை இணையத் தளத்தின் மூலமாகப் பதிவு செய்து கொள்வதற்கான நடவடிக்கையை பொலிஸார் நேற்றுத் தொடங்கினர்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் செயற்படுத்தப் படவுள்ள இந்தத் திட்டத்துக்கான இணையத் தளம் நேற்று வியாழக்கிழமை தொடங்கப்பட்ட அதேவேளையில் இதற்கான நடமாடும் சேவைப் பிரிவு ஒன்றும் செயற்படத் தொடங்கும் எனவும் பொலிஸ் செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவின் யோசனைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின்படி தென்பகுதியில் வசிக்கும் தமிழர்கள் அனைவரும் இணையத்தளத்தில் தம்மைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

இதற்கான இணையத்தளத்தை தொடங்கும் நிகழ்வு வெலிக்கடையில் உள்ள மகிந்தராம விகாரையில் நேற்றுப் பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெற்றது.

பொலிஸ் மா அதிபர் ஜயந்த விக்கிரமரட்னவால் இந்த இணையத்தளம் தொடங்கி வைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இது தொடர்பான சிறப்பு நடமாடும் சேவையும் செயற்படத் தொடங்கும்.

இந்த நடமாடும் சேவை தென் பகுதியில் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் குறிப்பிட்ட காலங்களில் தமது சேவையை மேற்கொள்ளும் எனவும் அக்காலப் பகுதிகளில் குறிப்பிட்ட பகுதிகளைச் சேர்ந்த தமிழர்கள் தம்மைப் பதிந்துகொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நடமாடும் சேவையில் பொலிஸ் குழு ஒன்று பணியில் ஈடுபட்டிருக்கும் எனவும் ஒவ்வொரு பகுதியாகச் சென்று அந்தப் பகுதியிலுள்ள தமிழர்களின் விபரங்கள் அனைத்தும் இதில் பதிவு செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-5)

# 'கல்வாரி யாகம்' இன்றும் மேடையேறும்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தால் கடந்த 29 ஆம் திகதி முதல் மன்ற அரங்கில் மேடையேற்றப் பட்டு வருகின்ற 'கல்வாரி யாகம்' திருப்பாடுகளின் காட்சிக்கு பெரும் எண்ணிக்கையான பார்வையாளர்கள் வருகை தந்து கொண்டிருப்பதால் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நாள்களுடன் மேலதிகமாக இன்று வெள்ளிக்கிழமையும் 'கல்வாரி யாகம்' திருப்பாடுகளின் காட்சி குறிக்கப்பட்ட நேரத்திற்கு மேடை யேற்றப்படவுள்ளதாக திருமறைக்கலா மன்றம் அறிவித்துள்ளது. (எ)

# கணனிப் பயிற்சிக்கு விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் யாழ்.மாவட்ட தலைமை அலுவலகத்தில் நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் புதிதாக கணனி பயிற்சி நெறி ஆரம்பமாகவுள்ளதால் ஆர்வமுள்ள மாணவர்கள் 103 /01, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி என்ற முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# சான்றிதழ் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையில் தொழிநுட்ப கற்கைகளை பயின்ற மாணவர்களுக்கான ஒரு தொகுதி சான்றிதழ்கள் மாவட்ட இணைப்பாளர் இரா. அகிலனால் கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்டுள்ளன.

இதுவரை சான்றிதழ்கள் கிடைக்கப் பெறாதவர்கள் 103/01, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# 'வார உரைகள்' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தாக்கப்பட்டார்

(மட்டக்களப்பு)

காத்தான்குடியிலிருந்து வெளியாகும் வார உரைகள் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் இனந் தெரியாதோரால் தாக்கப்பட்டுள்ளார்.

இவர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு 9 மணியளவில் வீட்டிலிருந்த போதே தாக்கப்பட்டிருப்பதாக கூறிய காத்தான்குடி பொலிஸார், தாக்குதலுக்குள்ளான நிலையில் காத்தான்குடி வைத்திசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டிருந்த பின்னர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-1)

# விரிவுரையாளர் ரவீந்திரனை நீதிமன்றில் ஒப்படைக்க வேண்டும்

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை

பல்கலைக்கழக விரிவுரையாளர் செல்வராசா ரவீந்திரனை விடுவிக்கக் கோரி யாழ். பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் வகுப்புகளை புறக்கணித்து வருகிறோம்.

தயவு செய்து விரிவுரையாளரை விடுவித்து எமது கல்வி நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என சம்மந்தப்பட்ட தரப்புக்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம் என யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அவர்கள் வெளியிட்ட அறிக்கை வருமாறு,

இந்தச்சம்பவம் பல்கலைக்கழக சமூகத்தின் மத்தியில் பேரதிர்ச்சியை உண்டாக்கியுள்ளது. இதனால் பல்கலைக்கழகத்தின் இயல்பான செயற்பாடுகள் பாதிப்பு அடைந்துள்ளன விரிவுரையாளரை விடுவிக்க வேண்டும் என அனைத்துப்பீட மாணவர்கள் ஒன்றியமும் கோரிக்கை விடுத்திருப்பதுடன் வகுப்புக்களை புறக்கணித்து வருகின்றன.

கடத்தப்பட்ட எமது விரிவுரையாளர் செல்வராசா ரவீந்திரன்,காவல்துறை உடையணிந்து வந்தவர்களால் அழைத்துச் செல்லப்பட்டதாக காணப்பட்டுள்ளது எனவே அவர் தற்போது எங்கிருக்கிறார் என் பதை வெளிப்ப டுத்துவதுடன், அவரை நீதிமன் றில் ஒப்படைத்து சட்டரீதியான முறையில் அணுகுவதுடன் கௌரவமான முறையில் விசாரணை செய்து அவரை விடு விக்க வேண்டும் என வேண்டுகிறோம்.

தயவு செய்து விரிவுரையாளரை விடுவிப்பது தொடர்பில் சம் பந்தப்பட்ட தரப்புகள் நடவடிக்கை எடுத்து பல்கலைக்கழ கத்தின் இயல்பு நிலைக்கும் மாணவர்களின் எதிர் கால நலனுக் கும் ஒத்துழைக்க வேண்டும் என யாழ். பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் வேண்டு கிறோம் என்றுள்ளது. (எ)


ஒட்டல் அதிபர்களே!

சுயதொழில் செய்ய விரும்புபவர்களே!



எங்களிடம் 'யோதி' பிராண்ட் (Jothy Brand) உன்னதமான கிரைண்டர் வகைகள், மரம் சீவும் இயந்திரம், பாட்டுவாள், வட்டவாள், சயினா, ஜேமன் தரமானவை. பட்டி வகைகள், டீசல் எஞ்சின் மற்றும் பாட்ஸ் வகைகள், சைனா கிரைண்டர், கிரைண்டர் உதிரிப்பாகங்கள் எதுவானாலும் ஒருமுறை எம்மிடம் விஜயம் செய்து பாருங்கள்.

சமுத்திரா ரேட் லிமிற்றட்,

117, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

C-2264


# நலன்புரி நிலைய மக்களுக்கு விரைவில் தொலைபேசிச் சேவை

(கொழும்பு)

நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்கு தொலைபேசி வசதிகள் ஏற்படு த்தி கொடுக்கப்பட இருப்பதாக அனர்த்த நிவாரண மற்றும் மீள் குடியேற்ற அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கான நடவடிக்கைகளைமேற்கொண்டிருப்பதாக கூறிய அனர்த்த நிவாரண மற்றும் மீள் குடியேற்ற அமைச்சு, இந்த மக்கள் உள்நாடு மற்றும் வெளிநாட்டிலிருக்கும் உறவினர்களுடன் தொடர்பினை ஏற்படுத் திக் கொள்ளும் வகையி லேயே இந்த தொலைபேசி சேவையை வழங்க விருப்பதாகவும் கூறியுள்ளது.

இதேவேளை எதிர்வரும் காலங்களில் விடுவிக்கப்படாத பகுதியிலிருந்து இலட்சக்கணக்கான மக்கள் அரசாங்கப்பகு திக்கு செல்வதற்கான வாய்ப்பிருப்பதுடன் இவர்களை தங்கவைப்பதற்கான சகல ஏற்பாடுகளும்மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர் ரிசாட் பதியுதீன் குறிப்பிட்டார். (எ-5)

# 62 ஆயிரத்து 212 பொதுமக்கள் அரச கட்டுப்பாட்டுக்கு வருகை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளிற்கு இதுவரை 62 ஆயிரத்து 212 பேர் வந்துள்ளதாக மீள் குடியேற்ற மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மீள்குடியேற்ற மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் ரிசாட் பதியுதீன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவ்வாறு வந்தவர்கள் வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள பதின்னான்கு இடைத்தங்கல் முகாம்களிலும் யாழ்ப்பாணத் திலுள்ள ஆறு நலன்புரி நிலையங்களிலும் தங்கவைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதுதவிர மேலும் 4 ஆயிரத்து 200 பொது மக்கள் ஓமந்தையில் அமைக்கப்பட்டுள்ள இடைத்தங்கல் முகாம்களிற்கு அனுப்பப்பட்டதாகவும் அவர் கூறினார். இதேவேளை நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள அறுபது வயதிற்கு மேற்பட்ட நானூறு பேரை அவர்களுடைய உறவினர்களுடன் இணைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அமைச்சர் மேலும் கூறினார். (எ-14)

# இன்று ஒரு தகவல்

## இல்லாத ஒன்று

இருட்டு நேரம். ஒருவன் ஓடிப்போய் விளக்கைக் கொளுத்திக் கொண்டு வந்தான்.

"என்ன செய்கிறாய்?" என்று கேட்டார் ஒருவர்.

"இருட்டை விரட்டிக் கொண்டிருக்கிறேன்" என்றான் அவன்.

"இல்லாத ஒன்றை எப்படி விரட்ட முடியும்?" என்றார் அவர்.

"என்ன... இருட்டு என்பது இல்லாத ஒன்றா?" என்று கேட்டான்.

அதற்கு அவர் விளக்கம் கொடுத்தார்.

இருட்டு என்று ஒன்றில்லை. வெளிச்சம் இல்லாத நிலைதான் அது. ஓரிடத்தில் வெளிச்சமாக இருந்தால் வெளிச்சமாக இருக்கிறது என்கிறோம். அந்த இடத்தில் வெளிச்சம் இல்லையென்றால் இருட்டு என்கிறோம்.

ஆக... அந்த இடத்தில் இருப்பதும் இல்லாமல் போவதும் வெளிச்சம் தான். இருட்டு என்று ஒன்று தனியாக ஓடி வந்து உட்காருவதில்லை.

நாம்தான் விளையாட்டுத்தனமாக இருட்டு என்று ஒன்று ஏற்கனவே இருந்ததாகவும் வெளிச்சத்தைக் கண்டவுடன் அது ஓடிவிடுவதாகவும் எண்ணுகிறோம். இதில் வெளிச்சம் இல்லாமல் தான் இருட்டு என்பதை நாம் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

நம் மனதில் உள்ள பயமும் இருட்டு மாதிரித்தான் என்கிறார்கள் ஞானிகள்.

வெளிச்சம் இல்லாமை- இருட்டு என்பதுபோல் அன்பு இல்லாமை - பயம் என்கிறார்கள்.

அன்பெனும் விளக்கை ஏற்றிவைத்தால் பயம் என்ற இருட்டு அங்கே இருக்காது.

சூஃபி இலக்கியத்தில் ஒரு சம்பவம் வரும். முல்லா நஸ்குதீனுக்கு காலையில் கல்யாணம். அன்று மாலை அவரும் அவருடைய இளம் மனைவியும் உறவினர்களுடன் ஆற்றைக் கடந்து போய்க் கொண்டிருந்தனர்.

திடீரென புயல்... வெள்ளம் படகு ஆட ஆரம்பித்து விட்டது. எல்லோருக்கும் பயம். முல்லா மட்டும் பயமில்லாமல் இருந்தார்.

"உங்களுக்கு பயமே இல்லையா?" என்று கேட்டார் அவருடைய மனைவி ஆச்சரியமாக!

இதற்கு முல்லா பதில் சொல்லவில்லை. இடுப்பிலிருந்த ஒரு கத்தியை எடுத்தார். மனைவியின் கழுத்துக்கு நேராக நீட்டினார். குத்துவது போல் ஓங்கினார். ஆனால் அவரது மனைவி எந்தவித சலனமுமில்லாமல் இருந்தார்.

அப்பொழுது முல்லா, "கத்தியென்றால் உனக்குப் பயமில்லையா?" என்றார்.

இதற்கு அவர், "கத்தி வேண்டுமானால் அபாயகரமானதாக இருக்கலாம். ஆனால் அதைப் பிடித்திருப்பவர் என்னில் அளவு கடந்த அன்பு வைத்திருக்கும் எனது கணவர். அதனால் நான் பயப்படவில்லை" என்றார்.

அப்பொழுது முல்லா சொன்னார்.

"அதேமாதிரித்தான் எனக்கும். இந்த அலைகள் ஆபத்தானவையாக இருக்கலர்ம். ஆனால் இதை ஆட்டுவித்துக் கொண்டிருக்கும் அல்லாஹ் அன்பு மயமானவர். அதனால் எனக்குப் பயமில்லை" என்றார்.

அவருக்கு நம்பிக்கை இருந்தது. அதனால் அன்பு இருந்தது. நம்பிக்கை இல்லையானால் அன்பும் இருந்திருக்காது. அன்பு இல்லையானால் பயம் வந்திருக்கும். படகிலிருந்த மற்றவர்கள் போல் அவரும் பயந்து நடுங்கிக் கொண்டு இருந்திருப்பார். இந்த உண்மையை நம் வாழ்க்கையிலும் பொருத்திப் பார்க்க வேண்டும்.

நமக்குப் பயம் ஏற்படுகிறது என்றால் என்ன அர்த்தம்? நம்மீதே நமக்கு நம்பிக்கையில்லை என்று அர்த்தம். பயமில்லாமல் இரு - என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

பயப்படுபவர்களுக்கெல்லாம் பெரியவர்கள் சொல்லும் அறிவுரை என்ன தெரியுமா?

எதிர்காலத்தைப் பற்றித் திட்டமிடுங்கள். தவறில்லை. ஆனால் எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்ற கற்பனையில் பயந்து கொண்டிருக்காதீர்கள். அதனால் உங்கள் மகிழ்ச்சி தான் பாழாகும்.

ஒருவர் டாக்டரிடம் வந்தார்.

" டாக்டர். பதினைந்து வருடங்களுக்கு முன்னர் ஒரு தடவை காலில் அடிபட்டு உங்களிடம் வைத்தியத்துக்கு வந்தேன். காலில் கட்டுப் போட்டு தண்ணி படாமல் பார்த்துக் கொள்ளச் சொன்னீர்கள்" என்றார்.

"அதனால் இப்பொழுது என்ன?" என்றார் டாக்டர்.

"இனிமேல் நான் குளிக்கலாமா? என்று கேட்பதற்காக வந்தேன் டாக்டர்" என்றார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பயிற்றப்படாத ஆசிரியர்களுக்கு தேசிய கல்வி நிறுவகத்தினால் பயிற்சி

(திருகோணமலை)

வடக்கு மாகாணத்தில் ஆசிரியர் உதவியாளர், பயிற்றப்படாத ஆசிரியர்களாகக் கடமையாற்றுபவர்களின் விபரங்கள் தேசிய கல்வி நிறுவகத்திற்கு அனுப்பி வைத்துள்ளதாக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

ஆசிரியர் உதவியாளர், பயிற்றப்படாத ஆசிரியர்களாக உள்ளவர்களுக்கு மகரகம தேசிய கல்வி நிறுவகத்தினால் ஆசிரியர் பயிற்சி வழங்கப்பட்டு ஆசிரிய சேவைக்குள் இணைத்துக் கொள்வதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

எனினும் ஆசிரியர் பயிற்சி வழங்கப்படுவதற்கு சேர்த்துக் கொள்ளப் படுபவர்களின் எண்ணிக்கை தொடர்பில் தேசிய கல்வி நிறுவனம் தீர்மானிக்குமெனவும் வடக்கு மாகாண கல்வி பரப்பிற்குள் கடமையாற்றும் ஆசிரிய உதவியாளர்கள், பயிற்றப்படாத ஆசிரியர்களின் விபரங்கள் வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் அனுப்பி வைத்துள்ளதாகவும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா குறிப்பிட்டார்.

(ஓ-5)

# க.பொ.த.உயர்தரப் பரீட்சை – 2009 வெளிவாரிப் பரீட்சார்த்திகளுக்கு...

கல்விப் பொதுத்தராதர (உ/த) பரீட்சைக்கு 2009 ஆம் ஆண்டு முதற்தடவையாக வெளிவாரிப் பரீட்சார்த்தியாக தோற்ற எதிர்பார்த்துள்ள 21 வயதிற்குக் குறைந்த விண்ணப்பதாரர்களை செயற்றிட்ட மற்றும் மதிப்பீட்டுக்காகப் பதிவு செய்தல் தொடர்பாக யாழ். மாவட்ட விண்ணப்பதாரர்களுக்கான பதிவிலக்கங்கள் வழங்குவதில் கப்பல் போக்குவரத்து சீரின்மை காரணமாக தாமதங்கள் ஏற்பட்டுள்ளதாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

க.பொ.த.(உ/த) பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி ஏப்ரல் - 08 ஆம் திகதியாதலால் மேற்படி பரீட்சார்த்திகள் தங்களது விண்ணப்பங்களை அனுப்புவதற்கு வசதியாக விண்ணப்பதாரர்களின் விபரங்களான பெயர், பதிவிலக்கம், தனிப்பட்ட முகவரி ஆகிய விபரங்கள் வடமாகாண கல்விப் பணிப்பாளர் வீ. இராசையாவால் அறிவிக்கப்பட்டுள்ளது.

விபரம் வருமாறு,

நி. துஷ்யந்தன் NP/20/AL/09/006/T – மந்துவில் மேற்கு, ப. சுதாகர் –NP/20/AL/09/007/T – மீசாலை கிழக்கு, ச. கமல்ரன் – NP/20/AL/09/008/T- யாழ்ப்பாணம், சி. தசரதன் - NP/20/AL/09/011/T– இடைக்காடு, பா. துஷ்யந்தி – NP/20/AL/09/012/T– யாழ்ப்பாணம், ஜெ. ஷரஷாலினி –NP/20/AL/09/013/T- யாழ்ப்பாணம், தே. கபிலன்– NP/20/AL/09/014/T– நயினாதீவு, ச. தயாளன் – NP/20/AL/09/015/T–யாழ்ப்பாணம், நா. லக்ஷன் – NP/20/AL/09/016/T- திருநெல்வேலி வடக்கு, க. நிருஜினி NP/20/AL/09/017/T- கொக்குவில், ஜெ. சிவானுஜா - NP/20/AL/09/018/T – யாழ்ப்பாணம், சு. உத்தமி – NP/20/AL/09/019/T- கந்தர்மடம், செ. நிரோஜினி – NP/20/AL/09/020/T-கோப்பாய், நி. ஜீவிதா - NP/20/AL/09/021/T- திருநெல்வேலி, பி. றெஜினா கிருஷாயினி – NP/20/AL/09/022/T- திருநெல்வேலி, யு. சார்லஸ் – NP/20/AL/09/023/T- கோவில் வீதி, யாழ்ப்பாணம், செ. சிவலோசன் – NP/20/AL/09/024/T- திருநெல்வேலி, சு. சுபாசினி – NP/20/AL/09/025/T- திருநெல்வேலி, இ. கோமதி - NP/20/AL/09/026/T – கோப்பாய், இ. விஜிதா –NP/20/AL/09/027/T- கல்வியங்காடு, கு. கோவர்த்தினி – NP/20/AL/09/028/T- நயினாதீவு, க. நிரோஜினி – NP/20/AL/09/029/T-நல்லூர், வே. மதுரிகா – NP/20/AL/09/034/T- நல்லூர்.

ர. லோஜிதா – NP/20/AL/09/035/T – குருநகர், ர. பபிதா –NP/20/AL/09/036/T – குருநகர், ஸ்ரீ. நிரோஜிகா –NP/20/AL/09/037/T – அல்வாய் தெற்கு, பி. பிரசாந்தி – NP/20/AL/09/038/T – அல்வாய் மேற்கு, ந. கௌஸினி – NP/20/AL/09/039/T – யாழ்ப்பாணம், தி. டனிஸ்ரன் – NP/20/AL/09/040/T – மானிப்பாய், மு. முருகதாஸ் – NP/20/AL/09/041/T –நீர்வேலி, யோ. கருணாகரன் – NP/20/AL/09/042/T – யாழ்ப்பாணம், இ. குந்தவி – NP/20/AL/09/043/T – அல்வாய் தெற்கு, இ. ஆனந்தரூபி –NP/20/AL/09/044/T–கோப்பாய் தெற்கு, சி. வினோத்டிமல் – NP/20/AL/09/045/T –நாவற்குழி, யோ. தர்மபாலினி – NP/20/AL/09/046/T –கோப்பாய் தெற்கு, அ. ய்ரனுஷாNP/20/AL/09/047/T – அரியாலை, சா. பிறிம்நாத் – NP/20/AL/09/048/T –சுன்னாகம், அ. ஜீவிதா – NP/20/AL/09/049/T –கரவெட்டி, அ. யொய்ஷி –NP/20/AL/09/050/T – யாழ்ப்பாணம், இ. மயூரன் –NP/20/AL/09/051/T – சுன்னாகம், பா. பிரசாந்தன் – NP/20/AL/09/053/T –அச்சுவேலி, வெ. ஸ்ரீகௌரி – NP/20/AL/09/054/T – கோப்பாய் தெற்கு, இ. துஷாந்தி – NP/20/AL/09/055/T – கோப்பாய் மேற்கு, பி. மேரி றெக்மி – NP/20/AL/09/056/T – துன்னாலை மேற்கு, க. சாந்தகுமார் – NP/20/AL/09/057/T –இருபாலை கிழக்கு, ஸ். ஜெயராஜ்–NP/20/AL/09/058/T –பாசையூர், ஜெ. கிருபரன் – NP/20/AL/09/059/T–சங்கானை.வி. நிறோச்சினி – NP/20/AL/09/061/T –குருநகர், அ. மேரி ஆன்நிலானி – NP/20/AL/09/064/T – உயரப்புலம், சோ. யுவராஜ் – NP/20/AL/09/065/T – கொக்குவில் மேற்கு.

(4ஆம் பக்கம் பார்க்க)

## இராசி பலன்

03.04.2009
(பங்குனி 21, வெள்ளிக்கிழமை)
அட்டமி முற்பகல் 8.03 மணிவரை
நவமி பின்னிரவு 5.41 மணிவரை
புனர்பூசம் முன்னிரவு 9.09 மணிவரை
இராகுகாலம் 10.40-12.10 மணிவரை
சுபநேரம் 6.10- 7.40 மணிவரை
ஸ்ரீராம நவமி, அட்டமி, நவமி

| | |
|---|---|
| மேடம் | மனோதைரியம், நற்கீர்த்தி, இஷ்ட சித்தி, பிரயாண நன்மை. |
| இடபம் | போசன சுகக்குறைவு, புதிய திருப்பம், மனோசங்கடம், முயற்சி தாமதம். |
| மிதுனம் | வெகுமானம், போசன சுகம், தெய்வதரிசனம், மாதர் நட்பு. |
| கடகம் | பிறருக்கு உதவுதல், குடும்பக் கவலை, காரிய அலைச்சல், சுபசெலவு. |
| சிங்கம் | தெய்வ தரிசனம், உறவினர் வருகை, தொழில் வருமானம், முயற்சி கைகூடும். |
| கன்னி | கடின உழைப்பு, நண்பர்கள் உதவி, காரியசித்தி, அதிகாரம். |
| துலாம் | ஆன்றோரால் மதிக்கப்படுதல், ஆரோக்கியக் குறைவு, முயற்சி தாமதம், அச்சமான நிலை. |
| விருச்சிகம் | அமைதிக் குறைவு, காரிய தடங்கல், போசன சுகம், தனவிரயம். |
| தனுசு | திடீர் பயணம், கலந்துரையாடல், பண வருவாய், தெய்வதரிசனம். |
| மகரம் | சுகவாழ்வு, உறவினர் வருகை, தொழிலில் ஆர்வம், தனலாபம். |
| கும்பம் | மனச்சோர்வு, பிரயாணம், தன விரயம், வேலைச்சுமை. |
| மீனம் | எதிர்பாராத நன்மை, சுபகாரியம், தாய்வழிஉறவு, வாகன சுகம். |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 |
| உருளைக்கிழங்கு | 60-80 | 80-90 |
| பச்சைமிளகாய் | 40 | 50 |
| தக்காளி | 30 | 40 |
| அவரை | -- | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 |
| கோவா | 10 | 15 |
| கரட் | 20 | 30 |
| பூசணி | 10 | 20 |
| புடோல் | 20 | 20 |
| வாழைக்காய் | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 20-25 | 30 |
| பெரிய வெங்காயம் | 50 | 60 |
| பாகற்காய் | 80 | 80 |
| வெண்டிக்காய் | 20-40 | 30-50 |
| கரணைக் கிழங்கு | 30 | 40 |
| பயிற்றங்காய் | 25 | 30 |
| லீக்ஸ் | 120 | 130 |
| போஞ்சி | 80 | 100 |
| கீரை – 1 பிடி | 30 | 25 |
| தேசிக்காய் | 100 | 110 |
| தேங்காய் (ஒன்று) | 30-40 | 40 |

## நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.இலக்கிய வட்டத்தினால் க.பரராச சிங்கம் (துருவன்) எழுதிய பூ சிறுகதைத் தொகுதி நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லை ஆதீனத்தில் செங்கை ஆழியான் தலைமையில் வெளியிடப்படவுள்ளது.

இதில் வெளியீட்டுரையை பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் நிகழ்த்தவுள்ளார். முதற் பிரதியை திருமதி செல்வராணி பரராஜசிங்கம் பெற்றுக்கொள்வார். (ஓ-6)

## மஹோற்சவம்

புங்குடுதீவு பாணாவிடை சிவன் தேவஸ்தான மஹோற்சவம் எதிர்வரும்11 ஆம் திகதி சனிக்கிழமை பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு வேட்டைத்திருவிழாவும், மாலை சப்பறத்திருவிழாவும், 19 ஆம் திகதி காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், 20 ஆம் திகதி காலை10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும், மாலை கொடியிறக்கமும் இடம் பெறவுள்ளது. தொடர்ந்து 21 ஆம் திகதி பகல் சங்காபிஷேகமும் , மாலை திருக்கல்யாண வைபவமும் நடைபெறவுள்ளது. (ஓ-2)

## வெப்பு நோய் பரவுகிறது

(ஊர்காவற்றுறை)

தீவகத்தில் கண்நோய், கூகைக்கட்டு, கொப்பளிப்பான், சின்னமுத்து போன்ற வெப்புநோய்கள் பரவிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் பொருட்டு கிணறுகளிலிருந்து எடுக்கப்படும் குடிநீரை கொதிக்க வைத்து பருகுவதன் மூலம் நோய்ப் பரம்பலை குறைக்கலாம் என சுகாதாரப் பகுதியினர் மக்களுக்கு அறிவுரை வழங்கியுள்ள்னர். (ஓ-72)


# திண்மக்கழிவு முகாமை தொடர்பான கலந்துரையாடல்

திண்மக்கழிவுகளை முகாமை செய்வதற்கான வினைத் திறனுடைய நிலைத்து நிற்கக்கூடிய திட்டமொன்றிற்கான முன்மொழிவை தயாரிக்கும் நடவடிக்கை ஒன்றினை முன்னெடுக்க நல்லூர் பிரதேசசபை திட்டமிட்டுள்ளது.

இத் திட்டத்தின் மூலம் கழிவுகளை சேகரித்தல், வேறு பிரித்தல் என்பவற்றுடன் பிளாஸ்டிக் பொலித்தீன், கண்ணாடி போன்றவற்றை மீள் சுழற்சி செய்வதற்கான திட்டங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இத்தி ட்டத்தினை நல்லூர் பிரதேச சபைக் குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதற்கான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் கொக்குவில் பொதுநூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இத் திட்டத்தினை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்காக புத்திஜீவிகள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள், இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டு ஆலோசனைகளையும் பங்களிப்புக்களையும் வழங்குமாறும், அதற்குரிய தரவுகள், தகவல்களையும் எடுத்து வந்து சமர்ப்பிக்குமாறும் நல்லூர் பிரதேசசபை செயலாளர் மேரிஜோசப் சாந்தசீலன் கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ-7)




இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் ஆயுட் காப்புறுதி நிறுவனம் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு இம் மாதம் 14 ஆம் திகதி வரை காப்புறுதி திட்டத்தில் இணைந்துகொள்கின்ற வாடிக்கையாளர்களுக்கு அவர்களது காப்புறுதித் தொகைக்கேற்ப பரிசுகளை வழங்கும் திட்டத்தினை ஆரம்பித்துள்ளது.

அந்த வகையில் காப்புறுதித் திட்டத்தில் இணைந்துகொண்ட வாடிக்கையாளர் ஒருவருக்கு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் யாழ்.பிராந்திய முகாமை யாளர் திருமதி R.F.அரியநாயகம் பரிசில் வழங்குவதையும், அருகில் ஆயுட் காப்புறுதி முகாமையாளர் அ.ரஞ்சித் காணப்படுகின்றார். (படம்:-கோபி)

## கோட்டமட்ட கோலப் போட்டிகள்

தரம்1 முதல் 5 வரையான மாணவர்களுக்கான கோட்டமட்ட கோலப் போட்டிகள் நாளை சனிக்கிழமை முற்பகல் 9மணிக்கு நடைபெறவுள்ளது.இதில் கோப்பாய் கோட்ட போட்டிகள் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும், நல்லூர் கோட்டப்.போட்டிகள் யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் ஆரம்பமாகவுள்ளது.

அன்றைய தினம் உரியநேரத்திற்கு மாணவர்களை சமுகம் தருமாறு கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.வி.குணசேகரம் தெரிவித்துள்ளார். (ஓ-6-30)

## பெரியபுராண முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினால் மக்கள் சாந்தி, சமாதானத்துடன் நிம்மதியாக வாழவேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்து மாதம் ஒரு திருமுறை முற்றோதலென பன்னிரு திருமுறைகளும் முற்றோதப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் 12 ஆம் திருமுறையான பெரியபுராண முற்றோதல் கடந்த மாதம் 14 ஆம் திகதி ஆரம்பமாகி தினமும் காலை 7 மணி முதல் 8.30 மணிவரையும், பிற்பகல் 4.30 மணிமுதல் இரவு 7.30 மணிவரையும் கந்தர்மடம், இந்து சமயப் பேரவை ஸ்ரீ நடராஜப்பெருமான் திருக்கோயிலில் நடைபெற்று வருகிறது. (ஓ-6)

## வருடாந்த பொங்கல்

கைதடி நாவற்குழி தெற்கு மகாவிஷ்ணு ஆலய வருடாந்தப் பொங்கல் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

வருடாந்தம் பங்குனி மாதத்தில் செய்யப்படும் இந்தப் பாரம்பரிய பொங்கல் நிகழ்வில் ஏராளமான அடியார்கள் காவடி, பாற்செம்பு எடுத்து தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவது வழமை. (ஓ-21)

# க.பொ.த.உயர்தரப் பரீட்சை - 2009...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

கி. ஜனகன் - NP/20/AL/09/066/T -அச்சுவேலி தெற்கு, சா. ஆனந்ரூபி - NP/20/AL/09/067/T - யாழ்ப்பாணம், க. துஷாந்தன் - NP/20/AL/09/070/T -கொழும்புத்துறை, யோ. கோபிகா - NP/20/AL/09/071/T - கொக்கு வில் மேற்கு, நா. ஜனனி - NP/20/AL/09/072/T - யாழ்ப்பாணம், த. திவாகரன் - NP/20/ AL/09/073/T - அல்வாய் கிழக்கு, சி. சிவ கணேஷன் - NP/20/AL/09/074/T - அல்வாய் கிழக்கு, கி. மேரி யூட்னா - NP/20/AL/09/075/T - கொழும்புத்துறை, த. திருவளமார் பன் - NP/20/AL/09/077/T - பருத்தித்துறை, சி. தனுஷன் - NP/20/AL/09/078/T - ஏழாலை மேற்கு, ச. சயந்தன் - NP/20/AL/09/079/T - யாழ்ப்பாணம், இ. பிரதீபன் - NP/20/AL/09/080/T - இணுவில் கிழக்கு, க. ஜெயந்தன் - NP/20/AL/09/081/T - ஏழாலை மேற்கு, லி. மயூரி - NP/20/AL/09/082/T - கோண்டாவில், சூ. சுஜந்தி - NP/20/AL/09/083/T - நீர்வேலி வடக்கு, மு. விஜயகௌரி -NP/20/AL/09/084/T - நீர்வேலி, சி. சுவஸ்திகா - NP/20/AL/ 09/085/T -யாழ்ப்பாணம், ச. கயூஷா - NP/20/ AL/09/086/T - அரியாலை, இ. விஷ்ணுகா - NP/20/AL/09/087/T - நீர்வேலி, உ. சாமலா - NP/20/AL/09/088/T -திருநெல்வேலி கிழக்கு, கு. அமுதகௌரி - NP/20/AL/09/089/T - கொக்குவில் கிழக்கு.

கா. றூக்ஷிகா - NP/20/AL/09/090/T -திருநெல்வேலி, க. கிருஸ்ணாலினி - NP/20/AL/09/091/T - கோப்பாய் தெற்கு, இ. வினோத் குமார் - NP/20/AL/09/092/T - கந்தர்மடம், சு. கமலாசினி -NP/20/AL/09/093/T - யாழ்ப்பாணம், இ. உமாசங்கர் - NP/20/AL/09/094/T - அல்வாய் கிழக்கு, ஆ. கிருஸ்ணஜெயந்தி - NP/20/AL/09/095/T - கரவெட்டி, த. கபிலா - NP/20/AL/09/096/T -சண்டிலிப்பாய், ச. கஜேந்திரன் - NP/20/AL/09/097/T - சுன்னாகம், யெ. சசினா - NP/20/AL/09/098/T - யாழ்ப்பாணம், மா. சிறானி - NP/20/AL/09/099/T - கோண்டாவில் கிழக்கு, ம. கிந்துஜா - NP/20/AL/09/100/T - கொக்குவில் கிழக்கு, ஸ்ரீ. துஷ்யந்தா - NP/20/AL/09/101/T - கோண்டா வில் மேற்கு, இ. காயத்திரி - NP/20/AL/09/102/T - வட்டுக்கோட்டை, பு. சுகிர்தா - NP/20/ AL/09/103/T - வட்டுக்கோட்டை, ஸ்ரீ. பிரசாத் - NP/20/AL/09/104/T - சண்டிலிப்பாய், ஜெ. சிவகஜன் - NP/20/AL/09/105/T - சண்டிலிப்பாய், ச.ராஜ்கந்தன்-NP/20/AL/09/106/T -சண்டிலிப்பாய், வ. தேசிகன் - NP/20/AL/09/107/T - திருநெல்வேலி, வா. வைஸ்ணவி - NP/20/AL/09/108/T - யாழ்ப்பாணம், இ. இவான் றோஷி -NP/20/AL/09/109/T - யாழ்ப்பாணம், உ. சுயானி - NP/20/AL/09/110/T - வண்ணார்பண்ணை, ம. வசந்தகேசவன் - NP/20/AL/09/111/T -நாயன்மார்கட்டு, ச. நிறோஜன் -NP/20/AL/09/112/T - அரியாலை, த. ரவிதாஸ் -NP/20/AL/09/113/T - நீர்வேலி.

வ.நிக்சன் -NP/20/AL/09/114/T -மானிப்பாய், கி.சாரங்கன்-NP/20/AL/09/115/T-அல்வாய் கிழக்கு, ந.சந்துஷா-NP/20/AL/09/117/T- அல்வாய் வடக்கு,ம.செந்தூரன்-NP/20/AL/09/118/T- அரியாலை, ச.நிலக்ஷி -NP/20/AL/09/119/T-மீசாலை மேற்கு,மோ. சுபத்திரா- NP/20/AL/09/120/T- திருநெல்வேலி , செ.பிருந்தா-NP/20/AL/09/121 /T-கொக்குவில் கிழக்கு, ம.லவன்சன்-NP/20/AL/09/122/T- சுதுமலை தெற்கு, நா.நிரந்தரி-NP/20/AL/09/123/T-உரும்பிராய் மேற்கு, சி.ரம்மியகலா- NP/20/AL/09/124/T- யாழ்ப்பாணம், ச.சுகிர்தன் -NP/20/AL/09/125/T-சங்கரத்தை, சி.சிவராணி- NP/20/AL/09/126/T - அராலிமேற்கு,இ. கீதாஞ்சலன்- NP/20/AL/09/127 /T - புலோலி மத்தி, ஜெ. புருசோத்தமன்- NP/20/AL/09/128/T- உடுவில் கிழக்கு, சி. ஆரணி- NP/20/AL/09/129/T - கந்தர்மடம், இ. சேந்தன்-NP/20/AL/09/130/T - அரியாலை மேற்கு, சு. நிரஞ்சலா- NP/20/AL/09/131/T- கொக்குவில் கிழக்கு, ப. செந்தூரன்- NP/20/AL/09/132/T- யாழ்ப்பாணம், வே. சுகிர்தினி-NP/20/AL/09/133/T- கோண்டாவில் வடக்கு, த. கிரிஷா- NP/20/AL/09/134/T -அச்சுவேலி தெற்கு, இ. நிமாலினி- NP/20/AL/09/135/T -யாழ்ப்பாணம், மோ.இந்துஜா- NP/20/AL/09/136/T சாவகச்சேரி, தி. ஜனனன்- NP/20/AL/09/137/T -கோண்டாவில் கிழக்கு.

ச.ஜமீலன்-NP/20/AL/09/138/T - மானிப்பாய், ஸ்ரீ.விஜிதா-NP/20/AL/09/139/T - பருத்தித்துறை, சு.கலைவாணி-NP/20/AL/09/140/T - வல்வெட்டித்துறை, ஜெ.தேவதாஸ்-NP/20/AL/09/142/T - யாழ்ப்பாணம், ந.ஹசானா-NP/20/AL/09/144/T - யாழ்ப்பாணம், இ.ஆரணி -NP/20/AL/09/145/T - கொக்குவில் மேற்கு, சி.மதுராஜினி- NP/20/AL/09/146/T - வட்டுக்கோடை,சி.சியமாளா- NP/20/AL/09/147/T - மூளாய்தெற்கு,ந. பாரதிதாஸன்- NP/20/AL/09/148/T - வேலணை கிழக்கு, யோ.மயூரி-NP/20/AL/09/149/T - ஊர்காவற்றுறை,சி.தனுஜா NP/20/AL/09/150/T - யாழ்ப்பாணம்,ம.ஜனனி- NP/20/AL/09/151/T - யாழ்ப்பாணம், தி.ஜனாகரன்-NP/20/AL/09/152/T - மல்லாகம், ஆ.கார்த்தீபன் -NP/20/AL/09/153/T - சாவகச்சேரி, வ.சோபியா-NP/20/AL/09/155/T - சுழிபுரம்-,த.விஜயகாந்-NP/20/AL/09/156/T - வேலணை மேற்கு,சி.குகசாந்தி -NP/20/AL/09/157/T-கோப்பாய்வடக்கு-நா.பிரியலக்ஷன்- NP/20/AL/09/158/T - வேலணை மேற்கு, ச.ஸ்ரீபன்-NP/20/AL/09/159/T - யாழ்ப்பாணம், தி.தயானன்- NP/20/AL/09/160/T - அளவெட்டி மேற்கு,கு.யூடிற்றா-NP/20/AL/09/161/T - நீர்வேலி தெற்கு,ப.கௌதமி-NP/20/AL/09/162/T - சாவகச்சேரி-த.கிரிதரன்- NP/20/AL/09/164/T - மானிப்பாய், யே.கார்மேலாடன்சினி-NP/20/AL/09/165/T - மல்லாகம்.

க.சாருஜன்-NP/20/AL/09/168/T -நெல்லியடி, த.மிதுலா-NP/20/AL/09/169/T - துன்னாலை மேற்கு,க.நிஷாகரன்-NP/20/AL/09/170/T -சுதுமலை தெற்கு, ச.கஜன்- NP/20/AL/09/171/T -உடுவில் தெற்கு,ம.சங்கர்பவன்- NP/20/AL/09/172/T -அச்செழு மத்தி, பே.சுபாஜினி- NP/20/AL/09/173/T -அராலி மேற்கு, இ.ஜான்சன் -NP/20/AL/09/174/T - சங்குவேலி தெற்கு,வி.நாகசோதி-NP/20/AL/09/175/T - தொல்புரம் மேற்கு, க.ஜெனிற்றா- NP/20/AL/09/176/T -கைதடி தெற்கு, ச.கம்ஷா- NP/20/AL/09/177/T -யாழ்ப்பாணம், யோ. தர்மினி-NP/20/AL/09/178/T -கந்தர்மடம், சி.சிந்துசா- NP/20/AL/09/179/T -யாழ்ப்பாணம், தி.அருளாலினி- NP/20/AL/09/180/T -நல்லூர் வடக்கு,சி.தயாளன் - NP/20/AL/09/181/T -வேலணை மேற்கு, இ.நிரஞ்சன்- NP/20/AL/09/182/T -கோப்பாய் வடக்கு, பா.திருவாரூரன்- NP/20/AL/09/183/T - திருநெல்வேலி கிழக்கு, பொ.தினுஷா- NP/20/AL/09/189/T -தாவடி தெற்கு,ஜெ.கபிலா- NP/20/AL/09/190/T -நல்லூர், இ.மெண்டிசா- NP/20/AL/09/191/T -உரும்பிராய் கிழக்கு, யோ.ஜெனனி- NP/20/AL/09/192/T -கொக்குவில் கிழக்கு,ம.உஷாயினி- NP/20/AL/09/193/T -தாவடி தெற்கு, இ.றொசான்- NP/20/AL/09/194/T -கொக்குவில் மேற்கு, வ. சிவநேசன்- NP/20/AL/09/195/T -யாழ்ப்பாணம், கா.கார்த்திகா- NP/20/AL/09/196/T -கோப்பாய் வடக்கு.

ஜெ. டெய்ஷன்-NP/20/AL/09/197/T-[illegible]வில் கிழக்கு, ப.அனோஜா-NP/20/AL/[illegible]198/T -சுதுமலை தெற்கு, ஞா.நிரோஜன்-NP/20/AL/09/199/T-சுதுமலை தெற்கு, மோ. நிக்ஷன்-NP/20/AL/09/200/T- ஆனைக்கோட்டை,இ. கதீஸ்ரன்- NP/20/AL/09/201/T- சுதுமலை தெற்கு, சி. அருள்பிரதாப் - NP/20/AL/09/202/T-அல்வாய் தெற்கு, ப. பிரபாலினி-NP/20/AL/09/203/T -சுண்டுக்குளி, மா.கிருஷாந்தன்-NP/20/AL/09/205/T- ஆனைக்கோட்டை மேற்கு,சௌ.தனேஷ்- NP/20/AL/09/206/T-சுன்னாகம், தி. ஆன்சர்மிளா-NP/20/AL/09/207/T -ஆனைக்கோட்டை மேற்கு,ப.யூட் கமில்ரன்-NP/20/AL/09/208/T- யாழ்ப்பாணம்,ஸ்ரீ.திவிஷா- NP/20/AL/09/209/T-பருத்தித்துறை, சி. ரஜிதா-NP/20/AL/09/210/T-இணுவில் கிழக்கு, த. சஞ்சீவன் -NP/20/AL/09/211/T-கரணவாய் கரவெட்டி,இ.செந்தூர்பிரகாஷ்-NP/20/AL/09/212/T-புன்னாலைக்கட்டுவன் தெற்கு, ந.கோகிலன்-NP/20/AL/09/213/T-கரணவாய், தி.தர்சிகா- NP/20/AL/09/214/T-சுண்டுக்குளி, க. ஜனேசன்- NP/20/AL/09/215/T- சண்டிலிப்பாய் வடக்கு, தி.பத்மினி-NP/20/AL/09/218/T-வட்டுக்கோட்டை,கு.மயூரதனா- NP/20/AL/09/219/T -நல்லூர், யோ.மேரிறொசாந்தினி-NP/20/AL/09/220/T-யாழ்ப்பாணம்,பா.மைதிலி-NP/20/AL/09/223/T- பருத்தித்துறை,நா. கோகிலவாணி-NP/20/AL/09/224/T-சுழிபுரம் மேற்கு,கா. சதீஸ்-NP/20/AL/09/225/T -மல்லாகம், ஈ.கௌசிகா- NP/20/AL/09/226/T- கரவெட்டி, க.விஜிதா- NP/20/AL/09/227/T-கரவெட்டி கிழக்கு,வை. சுபரூபன்-NP/20/AL/09/228/T- சுழிபுரம் மத்தி, க.சுதர்சன் -NP/20/AL/09/229/T- மல்லாகம்,பா. ராஜ்குமார்-NP/20/AL/09/230/T -மானிப்பாய், சி. நதீசன்- NP/20/AL/09/231/T -சாவகச்சேரி, இ.கிருசாந்தன் -NP/20/AL/09/232/T-கரவெட்டி. (ஓ-6-2)

# இலங்கையில் தமிழர் 112

## சிங்களரும் - தமிழரும்: இணைச் சாதனையாளர் 1070 – 1200

தெற்கு இலங்கையிலிருந்து சோழருக்கு எதிர்ப்புக் கொடுத்தோருள் விஜயபாகு ஒருவனே இறுதியில் வெற்றி பெற்றான். தெற்கு இலங்கையில் இவனுடன் போட்டியிட்டோரை ஒருவர் பின் ஒருவராக நீக்கிய பின் 1055 இல் அல்லது 1056 இல் இவன் தனியதிகாரம் பெற்றதும், உடனடியாகச் சோழருடைய எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டிய நிலை தோன்றியது. சோழருடன் போராடக் கூடிய நிலையை ஏறத்தாழப் பத்து ஆண்டுகளாக அவனால் அடைய முடியவில்லை. ஆனால், 1063 இல் சோழப் பேரரசன் இரண்டாம் ராஜேந்திர சோழன் இறந்ததும் அரசியற் சூழ்நிலை மாறியது.

ராஜேந்திரனுக்குப் பின் பதவியேற்ற வீர ராஜேந்திர சோழன் வட எல்லையில் மேலைச் சாளுக்கியருடைய கடும் எதிர்ப்பை முறியடிப்பதில் கவனஞ் செலுத்தியதால், தென் எல்லையில் சோழர் பாதுகாப்பு வலி குறைந்து காணப்பட்டது. இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திச் சோழர் மீது தாக்குதலை நடத்துவதற்கு விஜயபாகு முயன்றான்.

தன் தாக்குதல்கள் மூலம் சோழருக்கு நெருக்கடி நிலையை விஜயபாகு உண்டு பண்ண வீரராஜேந்திரன் பொலநறுவைக்குப் புதிய படைகளை அனுப்பி வைத்தான். இதன் பின் நடைபெற்ற போர்களில் விஜயபாகுவின் வலிமையைப் பாதிக்கும் வகையில் ரவிதேவ மற்றும் சள என்ற இரு சிங்களத் தளபதிகள் விஜயபாகுவைக் கைவிட்டுத் தங்கள் படைகளோடு சோழருடன் சேர்ந்தனர். ஆனாலும் விஜயபாகு வெகுவிரைவில் தன் படைகளை ஒருங்கிணைத்துப் பொலநறுவையைத் தாக்கி, சோழ ஆட்சியாளரை அங்கிருந்து வெளியேற்றினான். எனினும் சோழர் பொலநறுவையை இலகுவில் கைவிட விரும்பவில்லை. வீரராஜேந்திரசோழன் மேலும் படைகளை அனுப்பிப் பொலநறுவையிலிருந்து விரைவில் விஜயபாகுவை வெளியேற்றினான்.

விஜயபாகுவின் தளபதிகளுள் ஒருவனாகிய குருகுலத்தரையன் இப் போரில் உயிரிழுந்தான். விஜயபாகுவின் தொல்லைகள் அத்துடன் நிற்கவில்லை. சிங்களத் தலைவன் ஒருவன் விஜயபாகுடன் பகைமை பூண்டு, சோழர் பிரதேசத்துக்குச் சென்றான். விஜயபாகு பெற்ற வெற்றி கைநழுவிச் சென்றது.

மீண்டும் 1067 இல் தென்னிந்திய அரசியல் நிலை விஜயபாகுவுக்குச் சாதகமாக மாறியபோது தான் சோழரை வெளியேற்றுவது சாத்தியமான செயலாகியது. சோழருக்கு எதிராக மேலைச் சாளுக்கியர் வட எல்லையில் தாக்குதல்களை வலுப்படுத்த, தென் எல்லை மீண்டும் புறக்கணிக்கப்பட்டது.

வீரராஜேந்திர சோழன் இலங்கைக்கு மேலும் படையை அனுப்பக் கூடிய நிலையில் இருக்கவில்லை. சோழப் பேரரசை வலியிழக்கவிட்டு, 1070இல் அவன் இறந்தான். முதலாம் குலோத்துங்க சோழன் அவன் பின் பதவியேற்று மேலைச் சாளுக்கியருடன் போராடுவதில் கவனம் செலுத்த, இலங்கையில் சோழர் படைகளை விஜயபாகு வெற்றி கொண்டு அனுராதபுரத்தில் முடிசூட்டு விழாவை நடத்திய பின் பொலநறுவையில் தன் ஆட்சியைத் தொடங்கினான்.

### பொலநறுவையில் சிங்களர் ஆட்சி

பழைய சிங்கள அரசில் மீண்டும் சிங்களர் ஆட்சி ஏற்பட்டதுடன் சிங்களர்– தமிழர் உறவு தொடர்பாக ஒரு புதுக் காலகட்டம் தொடங்கியது. அடுத்த ஒரு நூற்றாண்டுக்கு மேலாக , எல்லாத் துறைகளிலும் சிங்களரும் தமிழரும் இணைந்து செயற்பட்டுச் சிறப்பான சாதனைகள் சிலவற்றை ஈட்டினர்.வம்ச உறவுகளைப் பொறுத்தமட்டில் ஆளும் சிங்கள வம்சத்துக்கும் தமிழ்வம்சங்களுக்கும் இடையில் இக்காலத்தில் உண்டானது போன்ற நெருங்கிய உறவு வேறெந்தக் காலத்திலும் இருக்கவில்லை.

அதேபோன்று, நிர்வாகம், படையமைப்பு, வர்த்தகம், நீர்ப்பாசனம், சமயம் மற்றும் கலைகள் ஆகிய பல்வேறு துறைகளில் இரு இனக்குழுக்களும் இணைந்து செயற்பட்டுச் சாதனைகளை ஈட்டின என்பது வரலாற்றாசிரியர்களால் பொதுவாகக் கவனிக்கப்படவில்லை.

இவர்கள் இணைந்து செயற்பட்டதன் விளைவாக இலங்கை வரலாற்றில் ஓர் உன்னதமான காலப் பகுதி உதயமாகியது. இதன் உண்மைச் சிறப்பு வெளிப்படாத வகையில் இக் காலப்பகுதி பொலநறுவைக் காலம் என்ற வெறுமையான ஒரு பெயரை வரலாற்று நூல்களில் பெறுகின்றது. சிறப்பை மறைக்கும் இப் பெயருள் அடங்கி இருப்பது ஓர் உண்மையான உன்னத இலங்கையர் நாகரிகம் மலர்ந்த காலமாகும்.

தன் ஆட்சியின் தொடக்கத்திலிருந்தே தமிழருக்கு எதிரான கொள்கை எதையும் விஜயபாகு கடைப்பிடிக்கவில்லை.சோழப் பேரரசன் குலோத்துங்கனும் சிங்கள மன்னனுக்கு எதிரான நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை. சோழ மன்னன் விஜயபாகுவுக்கு எதிராகச் செயற்பட்டான் என்று பாளி வரலாற்றேடு கூறினாலும் அக் கூற்றுக்கு மாறாக, குலோத்துங்கன் இலங்கை மன்னனுடன் நல்லுறவு கொள்ளவே விரும்பினான் என்று தோன்றுகின்றது.

விஜயபாகுவின் சகோதரியைத் திருமணம் செய்ய விரும்பிக் குலோத்துங்க சோழன் இலங்கைக்கு தூதனுப்பினான். ஆனால் விஜயபாகு தன் சகோதரியைச் சோழ மன்னனுக்கு மணம்முடித்து வைக்க விரும்பவில்லை.


பேராசிரியர்
**கா. இந்திரபாலா**

சோழ வம்சத்துடன் நடந்து போராட்டத்தின் பின் அவ் வம்சத்துடன் நெருங்கிய உறவை ஏற்படுத்திக் கொள்ள இலங்கை மன்னன் விரும்பவில்லைப் போலும். அதற்குப் பதிலாக இன்னொரு தமிழ் வம்சத்துடன், அதாவது பாண்டிய வம்சத்துடன், திருமண உறவை வைத்துக்கொள்ள எண்ணங் கொண்டு தன் தங்கை மித்திராவை ஒரு பாண்டிய இளவரசனுக்கு மணம் முடித்து வைத்தான். அப் பாண்டிய இளவரசனின் மகளின் மகனாகப் பிறந்தவன் தான் இலங்கை மன்னர்களுள் மிகச் சிறந்த வனாகப் போற்றப்படும் முதலாம் பராக்கிரமபாகு . (தொடரும்)

வாசகர்களின் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச் சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை 32



"தந்தி வந்துள்ளது. உன் அப்பா உன்னைப் பார்க்க வருகிறார். உன் அம்மா இரு வாரங்களுக்கு முந்தியே இந்தோனேஷியாவிலிருந்து வந்துவிடுவார்'' பாட்டி சொல்லி முடித்தாள். "தடபுடலான நத்தார் தான் இந்த வருடம்'' என்று வியந்தார் தாத்தா.

பள்ளிக்கூடத்தில் மதிய போசன நேரம். ஒபாமா தன் நண்பர்களுக்குச் சொல்லிக் கொண்டிருந்தார். தன் தந்தைவழித் தாத்தா லுவோ இனக்குழுவின் தலைவர்.

### ஜம்பொன்

தன் தந்தை இளவரசன். தாத்தா இறந்ததும் தந்தை தான் அரசனாவார். நண்பன் இடைமறித்துக் கேட்டான். "அப்படியானால் உன் தந்தைக்குப்பின் நீ தானே இளவரசன். நீ திரும்பிப் போகத் தானே வேண்டும்?''

## 'ஒபாமா' என்றால் அரபு மொழியில் எரியும் ஈட்டி என்பது பொருள்

ஆமாம். நான் விரும்பினால் போகலாம். ஆனால் ஒரு சிக்கல். அந்த இனத்தவர்கள் தங்களுக்குள் உட்போரில் அடிக்கடி ஈடுபடுவார்கள். அவர்கள் எல்லோரும் போர் வீரர்கள். ஒபாமா என்றாலே "எரியும் ஈட்டி'' என்பது கருத்து.

ஆக என் அப்பா இந்த உட்போருக்கு முதல் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்றார் ஒபாமா.

கற்பனை கலந்த இந்தப் பொய்க் கதையைக் கேட்க நண்பர்களுக்கு ஆர்வம் கூடி ஒருவரையொருவர் முண்டியடித்துக் கொண்டு வகுப்புக்குச் சென்றனர்.

ஒபாமாவின் தாய் மகனின் பயம் பற்றி ஊகித்தறிந்திருந்தாள். அவளும் அதே நிலையில்தான் இருந்தாள். தந்தை தங்குவதற்காக மாடிக் கட்டடம் ஒன்றின் அறையை ஒழுங்கு செய்தாள் அம்மா.

அடிக்கடி மகனுக்குத் தைரியம் சொல்லிக் கொண்டிருப்பாள். மீண்டும் ஒன்றுகூடல் சுமுகமாக இருக்கும் என்று அவனின் அதைரியத்தைப் போக்குவாள்.

இந்தோனேஷியாவில் அவர் இருந்த காலம் முழுவதிலும் தாய் தன் முதற் கணவருடன் கடிதத் தொடர்பை வைத்திருந்தாள்.

தன் மகன் பற்றிய செய்திகள் அனைத்தும் அவருக்குத் தெரியும் படியாக எழுதிக் கொண்டே வந்தாள்.

தாயைப் போன்றே தந்தையும் மீண்டும் விவாகம் செய்துகொண்டார். இப்போது ஒபாமாவுக்கு ஐந்து சகோதரர்களும் ஒரு சகோதரியும் கென்ய நாட்டில் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். தந்தை அங்கே ஒரு கார் விபத்தில் சிக்கி ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியிலிருந்து இப்போது தான் வெளிவந்தார். அவரின் அமெரிக்கப் பயணம் கூட அவரின் தேகநலனை மீட்கும் முயற்சியின் ஒரு பகுதியாகும்.

அப்பாவைப் பற்றிய கதைகளோடு கென்ய நாடு பற்றியும் அதன் வரலாறு பற்றியும் கொன்யாவின் முதல் அதிபர் ஜோமோ கென்யாட்டா பற்றியும் ஒபாமா அறிந்து வைத்தார்.

தன் தந்தை லுவோ இனத்தைச் சேர்ந்தவர் என்ற செய்தி ஒபாமாவின் ஆர்வத்தை மேலும் கிளப்பிவிட்டது. இன்னும் அறிய ஆவல்கொண்டார். இந்த லுவோ இனத்தவர்கள் நிலோட்டிக் மக்கள் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். அதாவது உலகின் மிகப் பெரிய நதியான நைல்நதியின் உற்பத்தி ஸ்தானமாகிய மேல் நதிப் பள்ளத்தை நிரப்பி வாழ்ந்த மக்கள் தான் அவர்கள்.சூடான் நாட்டின் ஆதிக்குடிகள். இவர்கள் ஆடு மாடு மேய்த்து இடம் விட்டு இடம்சேர்வர். மண் வீடுகளில் வாழ்ந்தனர்.

இறுதியில் அந்த நாளும் வந்தது.அது உண்மையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நாள். மிஸ் ஹெவ்றி ஒபாமாவை கொஞ்சம் முன்னமாகவே வீடு செல்ல அனுமதி தந்தாள்.

மரணதண்டனைக்கு ஆளான குற்றவாளி போன்று வீடு நோக்கி நடந்தார் ஒபாமா. கால்கள் அடி எடுத்து வைக்க மறுத்து விட்டன போல் இருந்தது. நடக்க நடக்க இருதயத்தின் டக் டக் என்ற ஓசை உரத்துக் கேட்டது. வீடு வந்து சேர்ந்ததும் வாசல் மணியை அழுத்தாமல் நின்றார். இனித்தப்பவே முடியாது என்ற நிலைக்குத்தான் வந்துவிட்டதை நினைத்த போது தான் கை பொத்தானை அழுத்தியது. பாட்டி கதவைத் திறந்தாள். (தொடரும்)

# செவ்வாய்க்கு மனிதர்களை அனுப்புவது தொடர்பான புரட்சிகரமான பரிசோதனை ரஷ்யாவில் ஆரம்பம்

(மொஸ்கோ)

செவ்வாய் கிரகத்துக்கு மனிதர்களை அனுப்ப முடியுமா என்பதை கண்டறிவதற்கான புரட்சிகரமான பரிசோதனையொன்று ரஷ்யாவின் மொஸ்கோ நகரில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

மனிதர்களைச் சுமந்து கொண்டு செவ்வாய்க்கிரகத்துக்கான இருவருட பயணத்தை மேற்கொள்ளக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்ட மூடிய கட்டமைப்பு சாதனத்தில் எவ்வளவு காலம் மனிதர்களால் தங்கியிருக்க முடியும் என்பதை கண்டறிவதற்காக நடத்தப்பட்ட பரிசோதனையில் ரஷ்ய விண்வெளி வீரர்களான ஸெர்கேயிரையாஸன்ஸ்கி மற்றும் ஒலேக் ஆர்தெம்யெஷ் ரஷ்ய மருத்துவரான அலெக்ஸி பரானோவ் பிரான்ஸ் விமானியான அலெக்ஸி ஷபாகோவ் ஜேர்மனிய பொறியியலாளரான ஒலிவர் நிக்கெல் ஆகிய அறுவரும் தாமாக முன்வந்து பங்கேற்கவுள்ளனர்.

இந்த விண்வெளிப் பயணக் கட்டமைப்புக்குள் வெளியுலக தொடர்பு எதுவும் இன்றி 100 நாட்களுக்கு மேல் தங்கியிருப்பவர்களுக்கு 20, 000 அமெரிக்க டொலர் சன்மானமாக வழங்கப்படவுள்ளது.

பங்கேற்ற அறுவரில் எவரும் சுகவீனமடைந்தால் அவர்களுக்கு அக் கட்டமைப்பில் இருந்து வெளியேற அனுமதியளிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் ரஷ்ய விண்வெளி வீரர் ஸெர்கேயி ரையாஸன்ஸ்கி விபரிக்கையில்,

இந்த பரிசோதனை வேடிக்கையான ஒன்றாக இருக்கப்போவதில்லை. ஆனால் இது கௌரவமளிக்கும் ஒன்றாக அமையும் என்று கூறினார்.

6 பேர் மூடிய உபகரண கட்டமைப் பொன்றில் நீண்ட காலம் வாழ்வது பெரும் சவாலாகும் என ஜேர்மனிய பொறியியலாளர் ஒலிவர் நிக்கல் கூறினார்.

இந்த பரிசோதனையானது ரஷ்ய விஞ்ஞான அக்டமியின் மருத்துவ உயி ரியல் பிரச்சினைகள் நிறுவகம், ஐரோப் பிய விண்



வெளி முகவர் நிலையம் என்பவற்றின் கூட்டிணைப்பில் முன்னெடுக் கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் இறுதியில் அல்லது எதிர் வரும் ஆண்டின் ஆரம்பத்தில் இதனையொத்த 520 நாள் பரிசோதனையொன்றை நடத்த திட்டமிட்டுள்ளதாக மேற்படி ஆராச்சி ஏற்பாட்டுக்குழுவின் பேச்சாளரான பாவெல் மோர் குனோவ் தெரிவித்தார். (ஓ-5)

## கண்ணிவெடிகளைக் கண்டுபிடிக்க எலிகளுக்குப் பயிற்சி

(மொசாம்பிக்)

ஆபிரிக்காவில் உள்ள மொசாம்பிக் நாட்டில் பதிக்கப்பட்டு உள்ள கண்ணிவெடிகளை கண்டுபிடிக்க எலிகளுக்கு ஒரு மிருகப் பயிற்சியாளர் பயிற்சி அளித்து வருகிறார். எலிகள் நுட்பமான வாசனைகளையும் சுவாசித்து அறியும் திறன் உள்ளவை. அதோடு கண்ணி வெடிகளை வெடிக்கச்செய்யும் அளவுக்கு கனமானவையும் அல்ல. சிறியவை தான்.

இதனால் அவற்றுக்கு பயிற்சி அளிக்கலாம் என்று தீர்மானித்து மிருக பயிற்சியாளர் வெண்டி வின்ஸ்டான்லி பயிற்சி அளித்து வருகிறார்.

காம்பியா நாட்டைச் சேர்ந்த கோபி எனப் படும் எலிகள் இந்த கலையில் திறமையானவை என்று கருதப்படுகிறது. 30 மோப்ப எலிகள் மொசாம்பிக் நாட்டில் இந்த பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. (ஓ-5)

## உலக தரிசனம்

## அணு ஆயுதக் குறைப்பு குறித்து பேச அமெரிக்காவும் ரஷ்யாவும் உடன்பாடு

(லண்டன்)

லண்டனில் சந்தித்த அமெரிக்க அதிபர் ஒபாமாவும், ரஷ்ய அதிபர் டிமித்ரி மெட்வெடேவ் அவர்களும், அணு ஆயுதங்களை குறைப்பதற்கான பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பது என்று உடன்பட்டுள்ளனர்.


இது தொடர்பான முன்னேற்றங்களை எதிர்வரும் ஜுலையில் சமரசப் பேச்சுவார்த்தையாளர்கள் அறிக்கையிடுவார்கள் என்றும். தற்போதைய ஒப்பந்தம் டிசம்பர் மாதத்தில் முடிவடைவதற்கு முன்னதாக புதிய உடன்பாடு ஒன்றை அவர்கள் உருவாக்குவார்கள் என்றும் அவர்கள் ஒரு கூட்டு அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

அணு ஆயுதங்களை மூன்றில் ஒரு பங்கால் குறைக்க இரு தரப்பும் உடன்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக பி.பி.சி செய்தியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ஓ-5)

## ஜி-20 மாநாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து லண்டனில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் ஒருவர் பலி;

லண்டனில் நேற்று ஆரம்பமான ஜி 20 மாநாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் லண்டன் நகரில் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

இவ்வார்ப்பாட்டத்தின் போது லண்டன் பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக் காரர்களுக்



கும் இடையில் மோதல் இடம்பெற்றதாகவும் ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும் சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்போது ஏற்பட்டுள்ள உலக பொருளாதார நெருக்கடிக்கு அமெரிக்க ஜனாதிபதி உட்பட உலக நாடுகளின் தலைவர்கள் தீர்வு காண வேண்டுமென வலியுறுத்தியே இந்த ஆர்ப்பாட்டம் லண்டனின் பல்வேறு பகுதிகளிலும் நடத்தப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தில் கலந்துகொண்டு 63 ஆர்ப்பாட்டக்காரர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இன்று உலகில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி உட்பட பல்வேறு பட்ட விடயங்கள் குறித்து இவ் ஜி 20 மாநாட்டில் பராக் ஒபாமா கலந்துரையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## ஏ.ஆர்.ரஹ்மானுக்கு கௌரவ கலாநிதிப்பட்டம்

(லண்டன்)

ஒஸ்கார் விருது பெற்ற தமிழக இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மானுக்கு லண்டனில் உள்ள மிடில்செக்ஸ் பல்கலைக் கழக கௌரவ கலாநிதி பட்டம் வழங்கத் தீர்மானித்துள்ளது.

மிடில்செக்ஸ் பல்கலையின் தெற்காசிய பிராந்திய பணிப்பாளர் ஜோ விக்டர் சென்னையில் உள்ள ஏ.ஆர்.ரஹ்மான் மற்றும் அவர் ஆரம்பித்துள்ள இசைப் பள்ளியின் முதன்மை நிர்வாக அதிகாரி ஆகியோரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இதன் போது எதிர்வரும் ஜுலை மாதம் லண்டனில் நடைபெறும் பல்கலைக்கழக விழாவில் ரஹ்மானுக்கு கலாநிதிப் பட்டம் வழங்க உள்ளதாக ஜோ விக்டர் தெரிவித்துள்ளார். (ஓ-6)

## தரையிலும் தண்ணீரிலும் ஓடும் பஸ்

(ஸ்கொட்லாந்து)

தரையிலும், தண்ணீரிலும் ஓடும் பஸ் உலகிலேயே முதல் முறையாக மால்டா நாட்டில் உருவாக்கப்பட்டுள்ளது. இதை ஸ்கொட்லாந்து நாட்டைச் சேர்ந்த ஜார்ஜ் ஸ்மித் உருவாக்கி இருக்கிறார். இந்த பஸ் தரையிலும் ஓடும் வரை வழக்கமான பஸ்போல தான் இருக்கும். தண்ணீரைத் தொட்டதும், இது மிதக்கத் தொடங்கி விடும். இந்த பஸ்சி; சக்கரங்கள் அலுமினியத்தால் ஆனது. இது தண்ணீரில் மணிக்கு 8 கடல் மைல் வேகத்தில் பயணம் செய்யக்கூடியது.

இதில் 50 பேர் பயணம் செய்ய முடியும். துருப்பிடிக்காத உலோகத்தால் இது உருவாக்கப்பட்டு உள்ளது. இடைவிடாமல் 3500 மணி நேரம் பயணம் செய்யக்கூடியது. ஆம்பிகோச் என்ற கம்பெனி இந்த பஸ்சை தயாரிக்கிறது. ஆண்டுக்கு 12 பஸ்களை தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது இதன் விலை ரூ.2 கோடி ஆகும். (ஓ-5)


ஓம் குகமயம்

### தவத்திரு வே.முருகேசு சுவாமிகள் அவர்களின் பன்னிரெண்டாம் ஆண்டு குருபூசை



இடம்:- சந்நிதியான் ஆச்சிரமம்

காலம்:- (03.04.2009) வெள்ளிக்கிழமை

சிறப்பு இசைச் சொற்பொழிவு :-

தருணம் இது உன் அருளைத் தா

வழங்குபவர் :- கவிமணி க. ஆனந்தராசா

(அன்னைதாசன், இளைப்பாறிய அதிபர்)

மேற்படி குருபூசை ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெறும் விஷேட அபிஷேக பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகி சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெறும் அறுபத்து மூவர் குருபூசையுடன் நிறைவு பெறும்.

வாராந்த நிகழ்வுகளின் வரிசையில் "என் கடன் பணி செய்து கிடப்பதே" எனும் பொருள்பற்றி இராசையா ஸ்ரீதரன் அவர்களின் சொற்பொழிவும் இடம்பெறும்.

சுவாமி அவர்களின் அன்பர்கள், அடியார்கள் குருபூசை தினத்தில் பங்குபற்றி திருவருளையும் குருவருளையும் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

சுபம் சாந்தி

தவத்திரு வே.முருகேசு சுவாமிகளின் அடியார்கள் சார்பில்
ஆ.அருணாசலம்

செல்வச்சந்நிதி,
தொண்டைமானாறு.

(C/2262)


## செயற்கை அங்கம் பொருத்தப்பட்ட உலகின் முதலாவது தவளை

(தென்னாபிரிக்கா)

உலகின் முதலாவது செயற்கை அங்கமொன்று பொருத்தப்பட்ட தவளை என்ற பெருமையை தென் ஆபிரிக்கத் தவளையொன்று பெறுகின்றது.

நாயொன்றால் கடிக்கப்பட்ட ஒரு காலை இழந்த நிலையில் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்த இத் தவளைக்கு தென் ஆபிரிக்க ஜொஹன்னஸ்பேர்க் நகரிலுள்ள மிருக வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு உலோகத்திலான செயற்கைக் கால் பொருத்தப்பட்டது.

மேற்படி சத்திர சிகிச்சைக்கான ஏற்பாடுகளை மேற்கொண்ட வன வாழ்க்கை நிபுணர் ஆன் மியர்ன்ஸ் விபரிக்கையில் செயற்கைக் கால் பொருத்தப்படாவிட்டால் தவளை அசைய முடியாமல் இறக்க நேரிடும் என்பதை உணர்ந்தே இந்த சத்திர சிகிச்சையை மேற்கொள்ள முடிவு செய்ததாக கூறினார்.

இந்த சத்திர சிகிச்சை வெற்றியளிக்குமா என்பது குறித்து முதலில் சந்தேகமாகவே இருந்தது. ஆனால் செயற்கைக்கால் தவளையின் இயல்பான அசைவுக்கு ஏற்ற வகையில் கச்சிதமாக பொருந்தியுள்ளமை எக்ஸ்ரே படங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டதைய



டுத்து ஆறுதலாக உள்ளது என அவர் தெரிவித்தார்.

மருத்து வமனை பராமரிப்பிலுள்ள தவளை தற்போது தேறி வருவதாக ஆன் மியர்ன்ஸ் கூறினார். (ஓ-5)

# உறவுகளை படுகொலை செய்த இன்ஜினியர்; அமெரிக்காவில் நடந்த துயரத்தில் மர்மம்

## கலிபோர்னியா பொலிஸார் தெரிவிப்பு

(சான்பிரான்ஸிஸ்கோ)

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில், சாண்டா கிளாரா என்ற நகரத்தில் கொம்பியூட்டர் இன்ஜினியர் தேவராஜன் தனது மைத்துனர் அசோகன், அவரது மனைவி சுஜித்ரா, அவர்களது குழந்தை அகானா, தனது குழந்தைகள் அகில், நேகா ஆகியோரைச் சுட்டுக்கொன்று விட்டு தானும் துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டார்.

தேவராஜனால் சுடப்பட்ட அவரது மனைவியும், அசோகனின் சகோதரியுமான ஆபா உயிருக்கு ஆபத்தான நிலையில் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். "தேவன் கலாதாட் எனப்படும் தேவராஜின் இந்தக் கொடூர முடிவுக்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. குண்டுகள் துளைத்து, உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கும் ஆபா கண்விழித்து எதுவும் சொன்னால் தான், கற்பனையில் கூட எண்ணிப் பார்க்க முடியாத இந்தச் சம்பவத்தின் உண்மையான காரணம் தெரிய வரும்" என்று இந்த வழக்கை விசாரித்து வரும் சாண்டா கிளாரா பொலிஸ் தலைமை அதிகாரி லெப்டினன்ட் பில் கூக் தெரிவித்தார்.

"சத்தமாகக் கூடப் பேசமாட்டார், மென்மையானவர் என்று கூறப்படும் இன்ஜினியர் தேவராஜன், 45 கலிபர் சிறிய தானியங்கித் துப்பாக்கிகள் இரண்டை சட்டபூர்வமாக அனுமதி பெற்றே வாங்கியுள்ளார்.

அவற்றில் ஒன்று 6 வாரத்துக்கு முன்பு வாங்கியது. இன்னொன்றை மைத்துனர் அசோகன் அமெரிக்காவுக்கு வருவதற்கு சில நாட்களுக்கு முன்னர்தான் வாங்கி இருக்கிறார்" என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

"பணத் தகராறு காரணமாக இந்தப் படுகொலை மற்றும் தற்கொலை நடந்திருக்க அடிப்படை இல்லை. அவர்களது குடும்பத்தில் பலரிடையே நிலவிய சிக்கல், தகராறு மற்றும் தேவராஜன்–அசோகன் ஆகியோருக்கிடையேயான தனிப்பட்ட குணம் காரணமாக தேவராஜ் கோபத்தின் உச்சிக்குச் சென்று, இரு குடும்பத்தினரையும் சுட்டுவிட்டு, தானும் தற்கொலை செய்துகொள்ளும் பாதகச் செயலைச் செய்திருக்கலாம் என்று கருதுகிறோம்" என்று பொலிஸார் கூறினார்கள்.

"கொலை செய்யப்பட்டவர்கள் சமையல் அறையைச் சுற்றி ஆங்காங்கே பிணமாகக் கிடந்தனர். சாப்பாட்டு மேசையில் உணவு வகைகள் அப்படியே இருந்தன. தேவராஜன் உடல் மட்டும் மாடியில் குளியலறையில் கிடந்தது" என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.


பல வருடங்களாக தேவராஜன் மற்றும் அவரது மனைவியை நன்கு தெரிந்த ரேணு செரியன் என்பவர் கூறுகையில்,

"கணவன்– மனைவிக்கு இடையே எந்தப் பிரச்சினையும் இருந்தது இல்லை. நல்ல முறையில்தான் வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கிடையே எந்தக் குழப்பமும் இருந்ததில்லை. தேவராஜன் மிகவும் அமைதியானவர். யாரிடமும் அதிகம் பேசமாட்டார். அவரது மனைவியும் மற்றவர்களிடம் சற்று விலகியே இருப்பார்" என்று தெரிவித்தார்.

"இறந்தவர்களின் உடல்களைப் பெறவும், உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் ஆபாவை பார்ப்பதற்கும், தேவராஜன் மற்றும் அசோகனின் உறவினர்கள் இங்கிலாந்தில் இருந்தும், இந்தியாவில் இருந்தும் இங்கு வந்துகொண்டு இருக்கிறார்கள்" என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதற்கிடையே 6 பேரின் உடல்களையும் தமிழகம் நீலகிரி மாவட்டம் அய்யன்கொல்லி கிராமத்துக்கு அனுப்பி வைக்க, அல்லது இறுதிச் சடங்குக்கு தேவையான பணத்துக்கு வடகலிபோர்னியா மலையாளிகள் சங்கம் ஏற்பாடுகளை செய்து வருகிறது.

தேவராஜின் வழக்கறிஞர் ராஜன் கூறுகையில், "இத்தகைய கொடூரச் செயலை தேவராஜன் செய்தார் என்று கேள்விப்பட்டதும் நான் அதிர்ச்சி அடைந்தேன். அவர் இப்படிச்


மகன் அகில் மற்றும் மகள் நேகாவுடன் தேவராஜ்

செய்வார் என்று நான் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. ஏனென்றால் அவர் எப்போதும் நல்லதையே நினைக்கக் கூடியவர். மூளை குழம்பியோ, குழப்பத்திலோ வேறு வித்தியாசமாகவோ அவரை நான் பார்த்தது இல்லை" என்று தெரிவித்தார்.

இதேவேளை, துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்துகொண்ட இன்ஜினியர் தேவராஜின் சொந்த ஊரான பந்தலூர் தாலுகா எருமாடு கப்பாலாவில் தேவராஜின் தாயார் லக்ஸ்மி, அக்கா தங்கமணி, அண்ணன் பிரேம்ராஜ், தங்கை மைதிலி, தம்பிகள் பார்த்தசாரதி, சத்தியன் ஆகியோர் வசித்து வருகின்றனர்.

தேவராஜின் தாயார் லக்ஸ்மி கூறியதாவது, "எனது மகன் தேவராஜுக்கு எந்தவித கெட்ட பழக்கங்களும் இல்லை. கடந்த 2 வருடங்களுக்கு முன்பு குடும்பத்தோடு ஊருக்கு வந்து சென்றான். இந்த வருடம் ஜுன் மாதம் குடும்பத்துடன் ஊருக்கு வருவதாக போனில் கடந்த வாரம் என்னிடம் பேசினான். மேலும் கடந்த சனிக்கிழமை 28 ஆம் திகதி இரவு தேவராஜ் என்னுடைய மூத்த மருமகன் ரவீந்திரனுடன் போனில் பேசி குடும்ப நலம் விசாரித்தான்.

எங்கள் குடும்பத்துக்குள் எந்தவித சொத்துப் பிரச்சினையும் இல்லை. எல்லாருமே பாசத்துடனே பழகி வந்தோம். தேவராஜ் தனது மனைவி, குழந்தைகளிடம் மிகவும் அன்பாக நடந்துகொள்வான். ஆனால் எணன்ன நடந்தது எனத் தெரியவில்லையே" இவ்வாறு தேவரா ஜின் தாயார் தெரிவித்துள்ளார். (5)

# பயங்கரவாதத்தின் மையப்பகுதியாக —பாகிஸ்தான் திகழ்கிறது—

## இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் தெரிவிப்பு

ஜி20 நாடுகளின் உச்சி மாநாடு லண்டனில் நடந்து வருகிறது. இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக உலக நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் லண்டன் வந்து சேர்ந்துள்ளனர். உலகளாவிய பொருளாதார சீர்குலைவுக்கு தீர்வுகாண்பது குறித்து இந்த மாநாட்டில் தலைவர்கள் முக்கிய ஆலோசனை நடத்துகிறார்கள்.

மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பிரதமர் மனக்மோகன்சிங் செவ்வாய்க் கிழமை டெல்லியில் இருந்து லண்டன் புறப்பட்டு சென்றார். லண்டனில் செய்தியாளரிடம் பேசிய அவர்,

கேள்வி: பாகிஸ்தான் பயங்கரவாதத்தை வளர்த்து வருகிறதா?

பதில் : பயங்கரவாதத்தின் மையப்பகுதியாக பாகிஸ்தான் திகழ்கிறது. தவிர, பயங்கரவாதத்தை தடுக்கவும் பாகிஸ்தான் தவறிவிட்டது.

இந்த உண்மையை உலக நாடுகள் உணர்ந்து கொள்ள வேண்டும். தனது எல்லைக்குள் இருக்கும் தீவிரவாதிகளை இந்தியாவுக்கு எதிராக தீவிரவாத செயல்களில் ஈடுபடுத்தக்கூடாது என்று பாகிஸ்தானை அறிவுறுத்தும் பொறுப்பு உலக நாடுகளுக்கு உண்டு.

மும்பையில் தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள் மீது நடவடிக்கை எடுக்காததில் இருந்தே, தீவிரவாதத்தை கட்டுப்படுத்த பாகிஸ்தான் தவறி விட்டது என்பதை புரிந்து கொள்ளமுடியும்.

இந்தியாவில், எந்த தீவிரவாத தாக்குதலும் நடத்துவதற்கு அனுமதிக்காப்படமாட்டாது என்று 2004 ஆம் ஆண்டு பாகிஸ்தான் அரசு நமக்கு உறுதியளித்தது. ஆனால் நடைமுறையில் இந்தியாவுக்கு எதிரான தீவிரவாதத்தை கட்டுப்படுத்த பாகிஸ்தான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் நாடுகள் தீவிரவாதத்தின் பிடியில் இருந்து விடுபடவேண்டும் என்றுதான் இந்தியாவும், அமெரிக்காவும் விரும்புகின்றன.

கேள்வி: பாகிஸ்தானால் தீவிரவாதத்தை கட்டுப்படுத்த முடியவில்லையா?

பதில் : பாகிஸ்தான் அரசு எப்படி இயங்குகிறது என்பதை கூறும் நிபுணத்துவம் என்னிடம் இல்லை. எனினும், மும்பை தாக்குதல் பற்றிய சதித்திட்டம் எவ்வாறு பாகிஸ்தானில் உருவாக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது என்பதை தற்போது உலக நாடுகள் அனைத்துமே ஒப்புக் கொண்டுள்ளன. (ஓ-5)




# இந்தியாவின் 7 அதிசயங்களில் ஒன்றாக மதுரை மீனாட்சி அம்மன் கோவில்

(புதுடில்லி)


என்.டி.டி.வி. நடத்திய இந்தியாவின் 7அதிசயங்கள் எவை என்ற வாக்கெடுப்பில் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலும் வெற்றி பெற்று இடம்பெற்றுள்ளது.

என்.டி.டி.வி. யோடு மத்திய அரசின் சுற்றுலாத்துறையும் இணைந்து 7 அதிசயங்கள் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பொன்றை இணையத்தளம் மூலம் நடத்தியுள்ளன. பல மாதங்களாக நடைபெற்ற இவ் வாக்கெடுப்பில் இலட்சக் கணக்கானோர் பங்கேற்று வாக்குகளைப் பதிவுசெய்தனர்.

இதில் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த 20க்கும் மேற்பட்டவை கலந்துகொண்டன. இவற்றில் அதிக வாக்குகளைப் பெற்ற 7 இடங்களை இந்தியாவின் 7 அதிசயங்களாக என்.டி. டி.வி அறிவித்துள்ளது.

இதில் உலகப் புகழ்பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோவிலும் ஒன்று. உலகின் 7 அதிகயங்களுக்கான போட்டியிலும் மதுரை மீனாட்சி அம்மன் கோவில் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

7 அதிசயங்களை அறிவிக்கும் நிகழ்ச்சி டில்லியில் கண்கவர் கலைவிழாவாக நடைபெற்றது. இதில் கமலஹாசன், ஐஸ்வர்யாராய் அபிஷேக்பச்சன், அமிதாப்பச்சன் உள்ளிட்



டோர் கலந்துகொண்டனர்.


மதுரை மீனாட்சி அம்மன் கோவில், நாலாந்தா பல்கலைக்கழகம், டில்லி செங்கோட்டை, ஜெய்சால்மர் கோட்டை, தோலவிரா சைட், கோனாரக் சூரியக் கோவில் மற்றும் கஜுராஹோ ஆகியவையே 7 அதிசயங்களாக தெரிவாகியுள்ளன.

தாஜ்மஹால் இந்தியாவின் அதிசயமாக தெரிவுசெய்யப்பட்டது.

மேலும் அமிர்த சரஸில் உள்ள சீக்கியர்களின் புனிதமான பொற்கோவில் இந்தியாவின் அமைதி அதிசயமாகவும், தவாங் புத்த கோவில் இறை அதிசயமாகவும் அறிவிக்கப்பட்டது. (ஓ-5)

# இலங்கைப் பிரச்சினையில் எல்லோருமே நாடகமாடுகிறார்கள்

## விஜயகாந்த் தெரிவிப்பு



(சென்னை)

இலங்கைப் பிரச்சினைக்காக தன்னுடைய நாடாளுமன்ற உறுப்பினர்களை ராஜினாமா செய்ய வைத்து மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக தி.மு.க. இருந்திருக்கலாமே என்று கேள்வி எழுப்பினார் தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த்.

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் இராமநாதபுரம் தொகுதி தே.மு.தி.க வேட்பாளர் சிங்கை ஜின்னாவை ஆதரித்து புதன் கிழமை அவர் பேசியதாவது,

இலங்கைப் பிரச்சினையில், அனைத்துக் கட்சி தீர்மானத்தின்படி தி.மு.கவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே ராஜினாமா கடிதம் அளித்தார்கள். மற்றக் கட்சி உறுப்பினர்கள் அளிக்கவில்லை என்று முதல்வர் கருணாநிதி கூறியிருக்கிறார்.

தி.மு.க.வினர் அளித்த கடிதங்களை மக்களவைத் தலைவரிடம் அளித்து மற்றகட்சியினருக்கு தி.மு.க வே முன்னுதாரணமாகஇருந்திருக்கலாமே? நீங்கள் ராஜினாமா செய்திருந்தால் மற்றக் கட்சியினரும் செய்திருப்பார்களே. ஏன் செய்யவில்லை?

இலங்கை பிரச்சினையில் எல்லோருமே நாடகமாடுகிறார்கள். மத்திய அரசு, மாநில அரசு இரண்டையுமே நான் எதிர்க்கிறேன். காவிரி, முல்லைப் பெரியாறு, இலங்கை பிரச்சினை என்று எந்தப் பிரச்சினையிலுமே இரு அரசுகளும் ஆர்வம் காட்டவில்லை. முக்கிய பிரச்சினைகள் எதுவுமே தீர்க்கப்படாத நிலையில் சாதனை என்று எதைக் கூறுகிறார்கள்? என்று பேசினார் விஜயகாந்த். (ஓ-5)

# அதிபர் சேவையிலுள்ள பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்

(நேற்றைய தொடர்ச்சி)

இந்த சம்பளத் திட்டமானது பிரமாணக் குறிப்பு வரையில் தாபனக் கோவை 7ஆம் பிரிவில் டிதி உப பிரிவின் படி செயல்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

படிக்குப்படி சம்பளமானது மாற்றியமைக் கப்பட்டால் அதிகரிப்பு அதிகமானதாக இருக் கும். ஆனால், மேல் சொல்லப்பட்ட தாபனக் கோவையின் விதிப்படி மாற்றப்பட்டால் இத் துடன் உள்ள அட்டவணையில் உள்ளது போன்ற சொற்ப தொகையே அதிகரிப்பாகக் கிடைக்கும்.

தாம் இப்போது பெறும் சம்பளத்திற்கு ஏற்ப எவ்வளவு தொகை அதிகரிக்கும் என இந்த அட்டவணையை வைத்துக் கணித்துக் கொள்ளலாம்.

போராட்டங்கள் நடக்கும் ; கல்வியமைச் சின் ஊடகப் பிரிவானது அதிபர்களின் சம் பளங்கள் புதிய சேவையில் ஆயிரக்கணக் கில் அதிகரிக்கப்பட உள்ளன என கவர்ச்சிகர மான அறிக்கைகள் வெளியிட்டு வருகின் றன.

தாபனக் கோவை 7 (iv)பிரிவு பின்பற்றப் படுமானால் ஆசிரியர்களுக்கான இவ்வா றான சொற்ப அதிகரிப்பே கிடைக்கும்.

ஆசிரியர்களுக்கு உச்ச நீதிமன்றத் தீர்ப் பின் படி வழங்க சிபாரிசு செய்யப்பட்டுள்ள ஒரு வருடாந்த சம்பள அதிகரிப்பு அதிபர்களுக் கும் வழங்க இன்னும் தீர்மானம் மேற்கொள் ளப்படவில்லை எனத் தெரிவிக்கின்றது.

புதிய பிரேரணைக் குறிப்பின் படி தற் போது மூன்றாம் வகுப்பில் உள்ள சகல அதி பர்களும் அட்டவணையில் உள்ள புதிய மூன் றாம் வகுப்புக்கு உள்வாங்கப்படுவார்கள்.

தற்போது 2 ஆம் வகுப்பு II ஆம் தரத் தில் உள்ள சகல அதிபர்களும் புதிய சேவை யில் இரண்டாம் வகுப்பில் உள்வாங்கப்படுவார் கள்.

2 ஆம் வகுப்பு 1ஆம் தரத்தில் உள்ள 1 வருட சேவைக்கு மேற்பட்ட சகல அதிபர்களும், புதிய சேவையில் 1ஆம் வகுப்புக்கு உள்வாங் கப்படுவார்கள். 1 வருடத்திற்கு குறைந்த சேவைக் காலத்தை உடையவர்கள் புதிய சேவையில் 2ஆம் வகுப்பிற்கு உள்வாங்கப் படுவார்கள்.

தற்போது 1ஆம் வகுப்பில் சகல அதிபர் களும் புதிய சேவையில் முதலாம்வகுப்பிற்கு உள்வாங்கப்படுவார்கள்.

17 வருட காலமாக பதவி உயர்வு கிடைக் காமல் அதிபர்கள் உள்ள நிலையில் தகைமை பெற்ற சகலருக்கும் பதவி உயர்வு வழங்கப் படாமல் உள்வாங்கினால் பெரிய நன்மை கிடைக்கின்றது.

அதிபர் தொழிற்சங்கங்களுடன் பல முறை கலந்துரையாடியும் எந்தவித ஆலோசனை எதுவும் கிடைக்க மாட்டாது. அத்தோடு அதி பர்களின் பிரச்சினையும் தீர மாட்டாது.

7 (iv) தாபனக் கோவை சம்பள மாற்றிய மைப்பு முறைப்படி என்னால் தயாரிக்கப்பட்ட அட்டவணையைப் பார்த்தால் முதலாம் இரண் டாம் படியில் உள்ளவர்களுக்காக ஐநூறு ரூபா வுக்கு மேற்பட்ட சம்பள அதிகரிப்பு உள்ளது. மற் றவர்களுக்கு குறைந்த சம்பள அதிகரிப்பு யும் இந்த புதிய இலங்கை பொதுக் கல்வி அதிபர் சேவை என்று நாமம் இடப்பட்டுள்ள சேவையில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

அதிபர் சங்கங்கள் தமது சேவையின் 'இலங்கை அதிபர் சேவை' என்ற பெயரை மேற்கண்டவாறு மாற்றக் கூடச் சம்மதம் தெரிவிக்கவில்லை.

கல்வியமைச்சும் தேசிய சம்பள பதவி யணி ஆணைக்குழுவும் சேர்ந்து தயாரித் துள்ள இந்த புதிய பிரமாணக் குறிப்பானது அரச சேவை ஆணைக்குழுவின் அனுமதி கிடைத்த பின்னரே அமுல்படுத்தப்படும் எனத் தெரிகின்றது.

இதற்கு முன்னர் தற்போது அதிபர் சேவை யில் உள்ள பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண் டும். அவை தீர்க்கப்பட்ட பின்னர் உள் வாங்கல் நடைபெற்றால் சில நன் மைகள் கிடைக்கும்.

**ஆசான்**

ஆனாலும், படிக்குப் படி சம்பளம் செய்யப் படாவிட்டால் கிடைக்கும் நன்மைகள் சிலதால் கூட உபயோகம் இருக்காது என்பதை இங்கு இறுதியாகக் குறிப்பிட வேண்டும். (முற்றும்)

**இலங்கை பொதுக்கல்வி அதிபர் சேவை - 2008.07.01 முதல்**

| வகுப்பு - 2 | | | வகுப்பு - 2 தரம் - II | வகுப்பு 2 | | வகுப்பு 2 தரம் 1 வகுப்பு - 1 | வகுப்பு 1 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| அ.தி.உ.இல 05/2006(iv) | புதிய சேவையின் சம்பளம் | மொத்த அதிகரிப்பு | அ.தி.உ.இல 06/2006(iv) | புதிய சேவையின் சம்பளம் | மொத்த அதிகரிப்பு | அ.தி.த.இல 06/2006(iv) | புதிய சேவையின் சம்பளம் | மொத்த அதிகரிப்பு |
| 15,995.00 | 17,060.00 | 1065.00 | 18,845.00 | 19,370.00 | 525.00 | 21,645.00 | 22,415.00 | 770.00 |
| 16,235.00 | 17,390.00 | 825.00 | 19,245.00 | 19,770.00 | 125.00 | 22,290.00 | 23,060.00 | 125.00 |
| 16,475.00 | 17,720.00 | 585.00 | 19,645.00 | 20,170.00 | 125.00 | 22,935.00 | 23,705.00 | 125.00 |
| 16,715.00 | 18,050.00 | 345.00 | 20,045.00 | 20,570.00 | 125.00 | 23,580.00 | 24,350.00 | 125.00 |
| 16,955.00 | 18,380.00 | 105.00 | 20,445.00 | 20,970.00 | 125.00 | 24,225.00 | 24,995.00 | 125.00 |
| 17,195.00 | 18,710.00 | 195.00 | 20,845.00 | 21,370.00 | 125.00 | 24,870.00 | 25,640.00 | 125.00 |
| 17,525.00 | 19,040.00 | 195.00 | 21,245.00 | 21,770.00 | 125.00 | 25,515.00 | 26,285.00 | 125.00 |
| 17,855.00 | 19,370.00 | 195.00 | | | | 26,160.00 | 26,930.00 | 125.00 |
| 18,385.00 | | | | | | 26,805.00 | 27,575.00 | 125.00 |
| 18.515.00 | | | | | | 27,450.00 | 28,220.00 | 125.00 |
| | | | | | | 28,095.00 | 28,865.00 | 125.00 |
| | | | | | | 28,740.00 | 29,655.00 | 125.00 |
| | | | | | | 29,385.00 | 30,445.00 | 270.00 |
| | | | | | | 30,030.00 | 31,235.00 | 415.00 |
| | | | | | | 30,675.00 | 32,025.00 | 560.00 |
| | | | | | | 31,320.00 | 32,815.00 | 705.00 |
| | | | | | | 31,965.00 | 33,605.00 | 60.00 |
| | | | | | | 32,610.00 | 34,395.00 | 205.00 |
| | | | | | | 33,255.00 | 35,185.00 | 350.00 |
| | | | | | | 33,900.00 | 35,975.00 | 495.00 |
| | | | | | | 34,545.00 | 36,765.00 | 640.00 |
| | | | | | | 35,190.00 | 37,555.00 | 785.00 |
| | | | | | | 35,835.00 | 38,345.00 | 140.00 |
| | | | | | | 36,480.00 | 39,135.00 | 285.00 |
| | | | | | | | 39,925.00 | |

# தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சிறந்த சந்தர்ப்பத்தை இழந்து விட்டது

## அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வுடனான சந்திப்பை தமிழ்த் தேசியக் கூட் டமைப்பு நிராகரித் துள்ளது. எனினும் சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவில் கலந்து கொள்ளுமாறு கூட்டமைப்புக்கு அரசாங்கம் சார்பில் தொடர்ந்து அழைப்பு விடுப்போம் என்று குழவின் தலைவரும் அமைச்சரு மான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரி வித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தகவல் தருகையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்த அழைப்பை அவர்கள் நிராகரித்துள்ளனர். இது மிகவும் துர தி ஷ்டமான நிலைமையாகும். பேச்சுவார் த்தை மூலம் பிரச்சினை தீர்க்கப்பட வேண் டும் என்று கூட்டமைப்பு வலியுறுத்துகின்றது. எனினும் பேச்சுவார்த்தைக்காக அழைப்பு விடுத்ததும் அதனை நிராகரிக்கின்றனர்.

யாருடனும் பேச்சுவார்த்தை நடத்தாமல் மூலையில் இருப்பதன் ஊடாக பிரச்சி னையைத் தீர்க்க முடியாது. பிரச்சினைகள் தொடர்பில் சகல தரப்பினருடனும் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும். அப்போது தான் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடி தீர்வுகளுக்கு வர முடியும். இதனை ஏன் புரிந்து கொள்கின்றார்கள் இல்லை என்று தெரியவில்லை.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிப தியை சந்தித்தன் பின்னர் ஆரோக்கியமான மாற்றம் ஏற்படும் என்று எதிர்பார்த்தோம். எனினும் சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவில் பங் கெடுக்குமாறு தொடர்ந்தும் எதிர்காலத்திலும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு நான் அழைப்பு விடுப்பேன்.

விரைவில் சர்வகட்சி குழுவில் அங்கம் வகிக்கும் கட்சிகள் யோசனையை தயாரித்து முடித்தவுடன் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அறி விப்போம்.

அதன் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி தனது யோசனையை முன்வைக்கும் என எதிர்பார்க் கின்றோம். அதனையடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுக்கவுள்ளேன். எவ்வாறெனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிறந்த சந்தர்ப்பம் ஒன்றை இழந்து விட்டது என்றார். (ஓ-5)

# தீர்வுக்கு 13 ஆவது திருத்தத்திற்கு அப்பால் செல்ல வேண்டியேற்படும்

## அமைச்சர் ராஜித சேனாரட்ண

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அரசியல மைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு அப்பால் செல்ல வேண்டியேற்படும் என்று நாங்கள் கருதுகின்றோம். அவ்வாறு செல்லு மிடத்து நாங்கள் முழுமையான ஆதரவினை வழங்குவோம் என்று நிர்மாணம் மற்றும் பொறியியல்துறை அமைச்சர் ராஜித சேனா ரட்ண தெரிவித்தார்.

அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ள முடி யாத எந்தவொரு நிபந்தனையையும் சர்வ தேச நாணய நிதியம் விதிக்காது ஏற்றுக் கொள்ள முடியாத நிபந்தனைகள் முன்வைக் கப்படுமிடத்து அவற்றை நிராகரிக்க வேண் டும் என்றும் அமைச்சர் கூறினார்.

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர் பில் கருத்து தெரிவித்த அவர் கூறியதாவது ,

நாட்டின் பிரச்சினையை தீர்ப்பதற்கு தற் போதைய நிலைமையில் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு அமைவான மாகாண சபை முறைமையை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என வலியுறுத்து கின்றோம். ஆனால் இறுதி தீர்வு என்று வரும் போது 13 ஆவது திருத்தச்சட்டத்துக்கு அப்பால் செல்ல வேண்டிவரும். அவ்வாறு 13 ஆவது திருத்தத்தை கடந்து அதிகாரங்களை பகிரும் முறைமைக்கு நாங்கள் முழுமையான ஆதர வினை வழங்குவோம். இந்தப் பிரச்சினையை தீர்க்கும் நடவடிக்கையில் நாங்கள் ஆக்க பூர்வமான பங்களிப்பை வழங்க வேண்டும்.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத் தில் கடன் பெறுவது தொடர்பாக பல விடயங் கள் கூறப்படுகின்றன. சர்வதேச நாணய நிதி யம் உறுப்பு நாடுகளின் வறுமையை ஒழிப்ப தற்கும் மற்றும் அபிவிருத்தி வேலைத் திட் டங்களுக்கும் கடன்வழங்கும். ஆனால் சில வேளைகளில் ஏற்றுக் கொள்ள முடியாத நிபந் தனைகளை விதிக்கலாம். ஆனால் அவற்றை நாங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடாது.

அவ்வாறு நாங்கள் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளாதவிடத்து கடன் வழங்க முடியாது என்று சர்வதேச நாணய நிதியம் கூறினால் அது குறித்து நடவடிக்கை எடுக்க முடியும்.

அது முற்றிலும் வேறுபட்ட விடயமாகும். ஆனால் சிலர் கூறுவது போன்ற சாத்திய மற்ற நிபந்தனைகளை தற்போதைய நிலை மைகளில் நாணய நிதியம் விதிக்காது என்று கருதப்படுகின்றது. காரணம் உலக மட்டத்தில் இன்று பொருளாதார நெருக்கடி தோன்றியுள் ளது. அதிலிருந்து மீளவே கடன் பெறுகின் றோம். (ஓ-5)

கேவலமான மனிதனாய் இருப்பதை விட- ஒரு நல்ல குரங்காய் இருக்கலாம்.

- கிரீஸ்

வலம்புரி

## கருணாநிதியைக் காப்பாற்ற சோனியா எழுதிய கடிதம்

இலங்கையில் யுத்த நிறுத்தம் செய்வதை தாம் வலியுறுத்தி வருவதாக காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி கருணாநிதிக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் யுத்த நிறுத்தம் செய்ய மத்திய அரசு முன்வரவேண்டுமென தமிழகத்தில் மக்கள் அகிம்சை வழியில் போராட்டம் நடத்திய போதெல்லாம் மௌனமாக இருந்த சோனியா, இப்போது கருணாநிதிக்கு கடிதம் எழுதுகிறார்.

முன்னதாக பிரதமர் மன்மோகன் சிங் கருணாநிதிக்கு கடிதம் எழுதியிருந்தார்.

'பொறுத்திருந்து பார்ப்போம்' என்ற வாசகத்துடன் மன்மோகன் சிங் கடிதம் எழுத, தொடர்ந்து சோனியா காந்தி கலைஞருக்கு கடிதம் அனுப்பி உள்ளார்.

இலங்கைத் தமிழர் மீது இதுவரை இல்லாத அக்கறை திடீரென சோனியாவுக்கு ஏற்பட்டது ஏன்?

இலங்கைத் தமிழர் பிரச்சினை தி.மு.கவுக்கு பெரும் வீழ்ச்சியைத் தரப்போகிறது. மத்திய அரசும், தமிழக மாநில அரசும் சேர்ந்து ஈழத் தமிழருக்குச் செய்த துரோகத்தனத்திற்கு தமிழக மக்கள் தகுந்த பாடம் புகட்டத் தயாராகி விட்டனர்.

தி.மு.க, காங்கிரஸ் கூட்டு தமிழகத்தில் கவிழ்ந்துபோனால் , அது மத்தியில் காங்கிரஸ் ஆட்சியை வீழ்த்தும்.

ஆக, கலைஞர் கருணாநிதி தனக்கு கடிதம் அனுப்புமாறு சோனியா காந்திக்கு இரகசியமாக கூறியிருப்பார். சோனியாவும் கருணாநிதிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

சோனியாவின் கடிதத்தை பார்க்கும்போது தமிழக முதல்வர் கருணாநிதிதான் இலங்கையில் யுத்த நிறுத்தத்தை செய்யவேண்டும்போல் உள்ளது.

ஈழத்தமிழரைக் காப்பாற்றுங்கள் எனக் கோரி முத்துக்குமாரன் முதல் எத்தனையோ 'முத்துக்கள்' தமிழகத்தில் தீக்குளித்த போதெல்லாம் கருணாநிதியின் கறுத்தக் கண்ணாடிக்கு அந்தத் 'தீ' மஞ்சள் கலந்த ஜோதியாகத் தெரிந்ததா? என்ன?

தேர்தல் வருகிறதென்றவுடன் ஈழத்தமிழரில் கலைஞருக்குப் பற்றுவருகிறது. அந்திம காலத்தை நெருங்கும் கலைஞர் கருணாநிதி தனது பதவிக்காக -தன் குடும்பத்திற்கு ஆட்சி அதிகாரங்கள் கிடைக்க வழிசெய்ய வேண்டுமென்பதற்காக எப்படியெல்லாம் நடந்து கொள்வார்-நாடகம் நடிப்பார்-கடிதம் எழுதுவிப்பார்-பதவியை விலகும்மாறு இராஜினாமாக் கடிதம் எழுத வைத்து திருகுதாளம் போடுவார் என்பதை மக்கள் முழுமையாக அறியும் வகையில் நிரூபித்து விட்டார்.

இந்த நிரூபணம் தி.மு.கவிற்கு ஆட்சியேறும் சந்தர்ப்பத்தைப் பல வருடங்களுக்குப் பிற்போடும். அந்த வேதனை முதுமை நிறைந்த கருணாநிதியை வருத்தும். இதுவே நிதர்சனமான உண்மை.

அவர் சோனியாவைக் கொண்டு எத்தனை கடிதம் எழுதினாலும் அவை எதுவும் அரங்கேறாதென்பது சர்வ நிச்சயம்.

## தமிழ் சிங்கள- புத்தாண்டு காலத்தில் எந்தவித நிகழ்வுகளும் நடத்தக்கூடாது

### ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

எதிர்வரும்தமிழ்- சிங்கள புத்தாண்டு காலத்தை முன்னிட்டு எந்த வித நிகழ்வுகளும் நடத்தப்படக் கூடாதென ஜனாதிபதி உத் தரவு பிறப்பித்துள்ளார்.

நாட்டின் தேசிய பாதுகாப்பை கருத்திற் கொண்டு விழாக்கள் மற்றும் நிகழ்வுகளை தவிர்க்குமாறு அரசாங்க அமைச்சர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

பாதுகாப்பு தரப்பினரின் அனுமதியின்றி பொது நிகழ்வுகளில் எந்த வொரு அமைச்சரோ அல்லதுமுக்கியஸ்தர்களோ கலந்து கொள்ளக்கூடாதென ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

கடந்த சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நடத்தப்பட்ட மரதன் ஓட்டப் போட்டியொன்றின் போது அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே படுகொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## "அருங்கலைகள் ஸ்ரீலங்கா" விற்பனைக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

தேசிய அருங்கலைகள் பேரவையினால் கிராமிய கைத்தொழில், சுயதொழில் அபிவிருத்தி அமைச்சு , இந்தியப் புடவைக் கைத்தொழில் அமைச்சுடன் இரண்டாவது தடவையாக இணைந்து "அருங்கலைகள் ஸ்ரீலங்கா" விற் பனைக் கண்காட்சியை நடத்தவுள்ளது.

இந்தியாவில் டில்லிக்கூடத்தில் 2009 ஆகஸ்ட் 25 முதல் செப்ரெம்பர் 7 வரை இலங்கை சுற்றுலா அமைச்சு, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, இந்தியாவின் இலங்கைத் தூதரகக் காரியாலயம் ,இலங்கையின் இந்திய தூதரக அலுவலகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் இக் கண்காட்சி நடத்தப்படவுள்ளது.

தேசிய அருங்கலைகள் பேரவையினால் பதிவு செய்யப்பட்ட புடவைக்கைத்தொழில் கலைஞர்கள் மாகாண மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர். ஆதலால் இதற்கு விண்ணப்பிக்கும் ஆர்வமும் தகமையும் கொண்டவர்கள் விண்ணப்பப் படிவத்தினை நல்லூர் பிரதேச செயலக தொழில்துறை நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்களிடம் பெற்று பூரணப்படுத்தி ஏப்ரல் 31ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்குமாறு நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் கேட்டுக்கொள்கின்றார். (ஓ-7)

## பார்வையற்றவர்களுக்கு வாக்களிப்பு வசதி !

(கொழும்பு)

பார்வையற்றவர்கள் தேர்தல்களின் போது வாக்களிப்பதற்காக நம்பிக்கைக்கு பாத்திரமான ஒருவரைத் தம்முடன் அழைத்துச்செல்லும் வகையில் தேர்தல் சட்டத்தில் திருத்தம் கொண்டு வர அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்திருந்தார்.

இவ்விடயம் தொடர்பாக அரசியல் கட்சித் தலைவர்களுடனும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்துடனும் கலந்துரையாடப்பட்டுள்ளது. (ஓ-6)

## இலங்கைக்கான வெளிநாட்டு முதலீடுகள் அதிகரிப்பு

### இலங்கை முதலீட்டு சபையின் தலைவர் தகவல்

(கொழும்பு)

இலங்கைக்கான வெளி நாட்டு முதலீடுகள் அதிகரித்து வருவதாகவும் கடந்த வருடம் 880 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீடுகள் இலங்கைக்குக் கிடைத்துள்ளதாகவும் இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர் தம்மிக பெரேரா கூறினார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுக் காலை அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இங்கு முதலீட்டுச் சபைத் தலைவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இலங்கையில் தொழிற்சாலைகள் மூடப்பட்டு வருவதாகவும் அதனால் பெருந்தொகையானோர் வேலையிழந்திருப்பதாகவும் எதிர்கட்சியினர் சுமத்தியுள்ள குற்றச் சாட்டுக்கள் ஆதாரமற்றவை.

கடந்த 2008 ஜனவரி மாதம் முதல் 2009 மார்ச் மாதம் வரையில் இலங்கையில் 50 தொழிற்சாலைகள் மூடப்பட்டன.ஆனால் 93 புதிய தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

கடந்த வருடத்தில் 7 ஆயிரம் பேருக்கு இத் தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்புகள் வழங்கப்பட்டன. இவ் வருடம் 10 ஆயிரம் பேருக்கான வெற்றிடம் உள்ளது என்றார். (ஓ-6)

## உலக செல்வந்தர் பட்டியலில் இரு இலங்கைத் தமிழர்கள்

(கொழும்பு)

உலக செல்வந்தர் பட்டியலில் இரண்டு இலங்கைத் தமிழர்களது பெயர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக பிரபல ஆங்கில இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவிலிருந்து வெளியாகும் உலகின் முதனிலை வர்த்தக சஞ்சிகைகளில் ஒன்றான போர் பஸ் சஞ்சிகையில் குறித்த இரண்டு இலங்கைத் தமிழர்களது பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இலங்கைத் தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த மலேசியரா்ன ரீ.ஆனந்தகிருஷ்ணன் என்பவர் உலகின் 62 ஆவது செல்வந்தராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மலேசியாவின் முதனிலை செல்வந்தராகவும் ஆனந்த கிருஷ்ணன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். 70 வயதான ஆனந்த கிருஷ்ணன் சுமார் ஏழு பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான சொத்துக்களுக்கு அதிபதி எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவரின் தந்தை யாழ்ப்பாணத்தின் வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் பெருமளவு பங்குகளை ஆன்ந்த கிருஷ்ணன் கொள்வனவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மற்றுமொரு இலங்கையரான ராஜ் ராஜரட்ணம் என்ற இலங்கைத் தமிழரது பெயரும் போர்பஸ் பில்லியன் அதிபதிகளின் பட்டியலில் இடம்பெற்றுள்ளது. ராஜ் ராஜரட்ணம் உலகின் 559ஆவது செல்வந்தராக போர்பஸ் சஞ்சிகை அடையாளப்படுத்தியுள்ளது.

இவரது மொத்த சொத்துக்களின் பெறுமதி 1.3 பில்லியன் அமெரிக்க டொலர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட ராஜ் ராஜரட்ணம் முன்னணி வர்த்தக நிறுவனமான ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் குழும நிறுவனத்தின் 10 வீதபங்குகளைக் கொள்வனது செய்துள்ளார். (ஓ-5)

## வெள்ளி நற்சிந்தனை 65

# பக்தியின் மொழி தமிழ்

பக்தியின் வசப்பட்டவருடைய செயற்பாடுகள் சற்று வேறுபட்டன. பொதுவான செயற்பாடுகளாக நாம் வகுத்துக் கொண்ட நடைமுறைகள் சில உள. உணவு உண்பது, ஆடை அணிவது , மனம் போனபடி பொழுதைப் போக்குவது, நட்புப் பாராட்டுவது என அவற்றைக் குறிப்படலாம். ஆனால் சித்தத்தைச் சிவன் பால் வைத்தவர்களுடைய செயற்பாடு பார்ப்பவர்களுக்கு விநோதமாக இருக்கும். அத்தகைய பக்திவயப்பட்டவர்களுடைய செயற்பாடுகளை நாயன்மார் தமது பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர்.

திருக்கோயிலில் அவர்கள் கோலம் கண்டு அதனைப் பாடலிலே பதிவு செய்யும் போது ஏனையவர்களும் அதைப் பற்றி எண்ணிப் பார்க்கவேண்டும் என்ற நோக்கம் நாயன்மாருக்கு இருந்தது. திருக்கோயிலில் தொழுகின்றனர். தூய்மையான நறுமலர்களைத் தூவிப் பாடி வழிபடுகின்றனர். அழுகின்றனர். இறைவன் மேல் கொண்ட காமத்தால் அரற்றுகின்றனர். சிலர் வீண் பொழுது போக்கி வழிபாட்டைப் புறக்கணித்து நிற்கின்றனர். இவர்கள் எல்லோரையும் தனது கணக்கிலே இறைவன் எழுதுகின்றான்.கோயில் எல்லோரும் ஒன்று கூடி வழிபாடு செய்யும் ஒரு பொது இடம். அவரவர் தத்தமது மனப்பக்குவத்திற்கு ஏற்றவகையில் வழிபாடு செய்யும் நிலையை நாவுக்கரசர் தனது பாடலில் தொகுத்துக் கூறியுள்ளார்.

மக்களின் மனப்பக்குவத்தை அவர் ஒரு வரிசை நிலையிலே எடுத்துக்காட்டுகிறார். மனப்பக்குவம் பெற்ற பக்தர்கள் இறைவன் பேராற்றலை உணர்ந்து தமது கைகளைத் தலைமேல் வைத்துப் பூரண சரணாகதி நிலையில் தொழுகின்றனர். தம்மை இறைவனுக்கு அடைக்கலமாக்கி வழிபடும் அவர்களை முதலிலே குறிப்பிடுகின்றார். அடுத்து மலர்களைத் தூவி வழிபாடு செய்பவர்களைக் காண்கிறார். திருக்கோயிலுக்குச் செல்லும் போது தூய்மையான மலர்களைக் கொண்டு போய் இறைவன் காலடியிலே பக்தியுணர்வோடு தூவித்துதித்து வழிபடுபவர் ஒரு நியமமான வழிபாட்டைச் செய்பவர். வேறு சிலர் திருக்கோயிலிலே அழுது வழிபாடு செய்கின்றனர். தாங்க முடியாத துன்பங்களையெல்லாம் எடுத்துச் சொல்லி அரற்றிக்கொண்டிருக்கின்றனர். இறைவன் திருச்செவியில் தமது குரல் கேட்கவேண்டும் என்ற அவாவுடன் வழிபாடு செய்கின்றனர். இறைவனைத் தமது குறைகேட்கும் அரசனாக நினைத்து அவர்கள் நம்பிக்கையோடு வழிபடும் காட்சி பிறரையும் அவர் குறை கேட்கத்தூண்டும் பரிவு நிலைக்கு அளாக்கும். இவற்றையெல்லாம் விடக் கோயிலுக்கு வந்து வீணே பொழுது போக்கி இறை வழிபாட்டைப் புறக்கணிப்பாரையும் நாவுக்கரசர் சுட்டிக்காட்டத்தவறவில்லை. இந்த வழிபாட்டு நிலைகள் இன்று வரை தொடர்கின்றன. இறைவன் எழுதும் கீழ்க்கணக்கில் இவை இடம்பெறும். இங்கு கீழ்க்கணக்கு என்ற தொகுப்புத் தொடர் இடம்பெற்றள்ளது.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

"தொழுது தூமலர் தூவித் துதித்து நின்று
அழுது காமுற்று அரற்றுகின்றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப்பாரையும்
எழுதும் கீழ்க்கணக்கின் அம்பரீசனே"

# தடுத்து வைக்கப்பட்டுள்ள எம்மை சுதந்திரமாக நடமாட அனுமதிக்க வேண்டும்

## நெலுக்குளம் நலன்புரி முகாமில் உள்ள மக்கள் கோரிக்கை

(கொழும்பு)

நலன்புரி முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள எம்மைசுதந்திரமாக நடமாட அரசாங்கம் அனுமதிக்க வேண்டும்.இதற்கான நடவடிக்கைகளைஉரிய தரப்பினருடன் பேசி மேற் கொள்ள வேண்டும் என்று வவுனியா நெலுக்குளம் நலன்புரி முகாமில் தங்கியுள்ள மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நெலுக்குளம் நலன்புரி முகாமிற்கு தமிழர் விடுதலை கூட்டணியின் தலைவர் வி. ஆனந்த சங்கரி, அவரின் செயலாளர் இரா.சங்கையா ஆகியோர் நேற்று முன்தினம் விஜயம் செய்தனர். இந்த விஜயத்தின் போதே கூட்டணித் தலைவரிடம்இந்தக் கோரிக்கையினை நலன்புரி முகாமில் தங்கியுள்ள மக்கள் விடுத்துள்ளனர்.

இந்த முகாமில் ஆயிரத்து 378 குடும்பங்களைச் சேர்ந்த 3ஆயிரத்து 70 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வந்து நலன்புரி முகாம்களில் நாம் தடுத்து வைக்கப்பட்டுள்ளோம். எமது சுதந்திரமான நடமாட்டத்திற்கு உரிய வழிவகைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள வயோதிபர்கள் மற்றும் நோயாளிகள் போன்றோர் வவுனியாவிலுள்ள தமது உறவினர்களுடன் சென்று வாழ்வதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும். இதற்குரிய நடவடிக்கையினை தாங்கள் மேற்கொள்ள வேண்டும் என்று தமிழர் விடுதலை கூட்டணியின் தலைவர் ஆனந்த சங்கரியிடம் இங்கு வாழும்மக்கள் கோரியுள்ளனர்.

நலன்புரி முகாமில் கடமைபுரியும் சில அரச ஊழியர்கள் முறையற்ற விதத்தில் செயற்படுவதாகவும் இவர்கள் குறித்தும் கவனம் எடுக்கப்பட வேண்டும் என்றும்இந்த மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இங்கு கருத்து தெரிவித்த கூட்டணித் தலைவர், வன்னியில் அனுபவித்த கஷ்டங்களை விட இங்கு நீங்கள் அதிகளவான கஷ்டங்களைஅனுபவிக்கலாம். ஆனாலும், சில மாதங்கள் பொறுமையாக இருந்தால் சொந்த இடங்களில் மீளக்குடியேறும் நிலை ஏற்படும் . இது குறித்து உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு அரசாங்கத்திடம் நான் வலியுறுத்துவேன் என்று தெரிவித்துள்ளார்.

தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றினையும் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள மக்கள் கூட்டணித் தலைவரிடம் கையளித்துள்ளனர். (ஓ-5)

# சுயதொழில் ஊக்குவிப்பு பயிற்சி வகுப்பு

(நல்லூர்)

சமூக அபிவிருத்தி மன்றத்தினால் பெண்களுக்கான சுய தொழில் ஊக்குவிப்பு பயிற்சி வகுப்பு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மன்றத்தலைவர் திருமதி ஜெபமணி ஜோசப் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக நல்லூர் (ஜே/108) கிராம அலுவலர் திருமதி இராகினி இராமலிங்கம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஓ-6)

# பூசா முகாமுக்கு சென்ற வயோதிபப் பெண்ணை காணவில்லையென பொலிஸில் முறைப்பாடு

(கொழும்பு)

பூசா முகாமில் தடுத்து வைக்கப்பட் டுள்ள தனதுபேரனை பார்க்கச்சென்ற 71 வயது வயோதிபப் பெண் காணாமல் போயுள் ளதாக புறக் கோட்டை பொலிஸில் முறைப் பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை5 மணிக்கு பூசா முகாமிற்கு சென்ற வயோதிபப் பெண்ணே இவ்வாறு காணாமல் போயுள் ளார்.

கொழும்பு -ஸ்ரீ கதிரேசன் வீதியிலுள்ள விடுதியில் தங்கியிருக்கும் செல்வன் தெய்வானை என்பவரே காணாமல் போயுள்ளவராவர்.

2007 ஆம் ஆண்டுடிசம்பர் மாதம் 30 ஆம் திகதி சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டு பூசா முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தனது பேரனை பார்வையிடுவதற்காக இந்த வயோதிபப் பெண் வாரம் தோறும் பூசா முகாமுக்குச்சென்று வந்துள்ளார்.இதே போல் செவ்வாய்க்கிழமை சென்றபோதே இவர் காணா மல் போயுள்ளார். (ஓ-5)

# முல்லையிலிருந்து திருமலைக்கு அழைத்து வரப்பட்டவர்களில் 60 பேர் உயிரிழப்பு

## கிழக்கு மாகாண பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி தகவல்

(மூதூர்)

முல்லைத்தீவில் மோதல்கள் காரணமாக காயமடைந்து கப்பல் மூலம் திருமலைக்கு அழைத்துவரப்பட்டவர்களில் இதுவரை 60 பேர் உயிரிழந்துள்ளனர் என்று கிழக்கு மாகாண பிராந்திய சுகாதார வைத் திய அதிகாரி டாக்டர் ஜி.ஞானகுணாளன் தெரிவித்தார்.

முல்லைத்தீவிலிருந்து காயமடைந்த நிலையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வழித்துணையுடன் இதுவரை 6 ஆயிரத்து 597 பேர் திருகோணமலைக்கு கப்பல் மூலம் அழைத்துவரப்பட்டிருந்தனர். இவர்களிலேயே சிகிச்சை பலனின்றி 60 பேர் உயிரிழந்தனர்.

திருகோணமலை பொது வைத்தியசாலையில் 46 பேரும் புல் மோட்டை தற்காலிக வைத்தியசாலையில் 14 பேரும் உயிரிழந்துள்ளனர் என்றும் அவர் கூறினார்.

இது குறித்து ஞானகுணாளன் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவில் இருந்து இதுவரை 16 தடவைகள் காயமடைந்தவர்கள் கப்பல் மூலம் அழைத்து வரப்பட்டனர். திருகோணமலை வைத்தியசாலைக்கு 3ஆயிரத்து 635 பேரும் புல்மோட்டைக்கு 2 ஆயிரத்து 962 பேரும் அழைத்துவரப்பட்டனர். இவர்களில் காயமடைந்தவர்களுக்கு உதவிபுரிவதற்கு வந்தவர்களும் அடங்குவர்.

திருகோணமலை பொது வைத்தியசாலையில் 10 தடவைகளில் அழைத்துவரப்பட் டோரில் 46 பேர் உயிரிழந்தனர். இதே போல் 14 பேர் புல்மோட்டை வைத்தியசாலையில் மரணமாகினர். மேலும் 16 தடவை வரை அழைத்துவரப்பட்டவர்களில் 5 பேர் சிகிச்சை பலனிற்றி இவ்வாரம் உயிரிழந்துள்ளனர். இவர்களில் 3 பெண்களும் ஒரு குழந்தையும் ஆண் ஒருவரும் அடங்குவர்.

இறுதியாக 164 ஆண்களும் 227 பெண்களும் கப்பல் மூலம் முல்லைத்தீவில் இருந்து அழைத்துவரப்பட்டனர். இவர்களில் 60 பேர் 8 வயதுக்கும் 14 வயதுக்கும் இடைப்பட்ட சிறுமிகளாவர். 8 வயதுக்கு குறைந்த சிறுவர்கள் 54 பேரும் இறுதியாக அழைத்துவரப்பட்டவர்களில் அடங்குவார்கள்.

திருகோணமலை வைத்தியசாலையில் தற்போது 254 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களில் 128 பேர் சத்திர சிகிச்சை நிலைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்களில் பெரும் பாலானோர் சிகிச்சையை அடுத்து வவுனியா, பதவியா போன்ற பகுதிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் என்றார். (ஓ-5)

# ஸ்ரீராம நாம மகிமை

## இன்று ஸ்ரீராம நவமி

ஸ்ரீராம பிரான் அவதரித்த பாரத பூமி, ஒரு புண்ணிய பூமி. பாரத தேசத்தில் எங்கெல்லாம் ஸ்ரீ ராமனின் பாதங்கள் பட்டதோ, அங்கெல்லாம் நமது பாதங்களை வைத்தாலே போதும். நம்மோடு ஒட்டி வந்த பாவங்கள் பதறியடித்துக் கொண்டு பறந்து போய் விடும். ஸ்ரீ ராமன் மீது பக்தி கொண்டு ஸ்ரத்தையுடன் அவன் பாதங்களில் சரணாகதி செய்தாலே போதும். சர்வ வல்லமை பெற்ற அந்தப் பாதங்கள் நமக்குச் சகல நன்மைகளையும் அள்ளிக் கொடுத்து விடும்.

விபீஷணனுக்கு ஸ்ரீராமனை நன்றாகவே தெரிந்திருக்கிறது. ராமனிடம் சரணாகதி அடைந்தான். அதனால் இலங்கைக்கு அதிபதியானான். ஸ்ரீ ராமன் பாதங்களுக்கு அவ்வளவு மகிமை உண்டு. பாதங்களுக்கு மட்டுமே மகிமை. "ராம"நாமத்திற்கும் இதை விட அதிக வலிமையுண்டு.

முன்பொரு சமயம் பரமேஸ்வரன் தன்னைச் சுற்றியுள்ள கணங்களுக்கு யாரை அதிபதியாகவும் , தலைமை நாயகனாகவும் நியமிப்பது என்று யோசித்தார்.

குமரனையும், விநாயகரையும் அழைத்தார். தன்னுடைய அந்த எண்ணத்தை எடுத்துரைத்து, "இந்த உலகத்தை யார் முதலில் சுற்றி வருகிறீர்களோ அவர்களுக்கு என்னைச் சுற்றியுள்ள கணங்களுக்கு அதிபதி ஆக்குகிறேன்" என்றார்.

இதே போல் முன்பு ஒரு மாம்பழத்தை கொடுப்பதற்கு முருகனையும், விநாயகனையும் சோதித்த சோதனை வேதனையாகி , குன்றுதோறும் குமரன் என்ற கதையாகி விட்டது. அப்போது ஏமாந்து போனதைப் போல இப்போது ஏமாற விரும்பாத முருகன் தாய், தந்தையரே உலகம் என்று சுற்றி வந்தான்.

ஆனால் அதிபுத்திசாலியான விநாயகரோ, ராமநாமத்திற்குள் இந்த பிரபஞ்சமே அடங்கியிருக்கிறது என்றரகசியத்தை அறிந்து வைத்திருந்ததால் பூமியில் "ராமா" என்று எழுதி ,அதைச் சுற்றி வலம் வந்து, பரமேஸ்வரன் முன் நின்றார். பரமேஸ்வரன் விநாயகரைப் பாராட்டி விநாயகருக்கே அந்தப் பதவியை அளித்தார். கணங்களுக்கு அதிபதி என்பதால் தான் அவரை" கணபதி" என்று அழைக்கிறோம்.

"ராம"என்ற நாமத்தினால் தான் கணங்களுக்கு அதிபதியானான் கணேசன்.

ஆக "ராம"நாமத்திற்கு இப்படிப்பட்ட வலிமையுண்டு. ஸ்ரீ ராமனின் பாதமும் சரி, நாமமும் சரி நம்மை நல்ல பதவிக்கு அழைத்துச் செல்லக் கூடியவை.

ஒரு நாளில் உன் வாயால் எத்தனையோ அவச் சொற்களையும், இழிச் சொற்களையும் பேசி பாவத்தைத் தேடிக் கொள்ளும் மானிடனே! ஒரே ஒரு முறை அந்த ராம நாமத்தை உன் வாயால் உச்சரித்து அந்தப் பாவத்தைப் போக்கிக்கொள். ஒரு முறையென்ன, பல முறைசொல். இரவு படுக்கைக்குச் செல்லும் முன்பு, ராமனை நினைத்து, பாதத்தைத் தொட்டு வணங்கி விட்டுப்படு. காலையில் எழுந்திருக்கும்போது "ராமா" என்று சொல்லிக் கொண்டே எழுந்திரு.

தூங்கும் கண்கள் ராமனையே நினைத்திருக்கட்டும். தொழுகின்ற கைகள் ராமனையே தொழுது கொண்டிருக்கட்டும். புராணமும், காவியமும் ஒரே விஷயத்தைத் தான் திரும்ப திரும்பச் சொல்கின்றன. நீ எந்த நதியிலே குளித்தால், கரையேறுவாயோ அந்த நதியிலே குளித்து விடு. நீ எந்த தெய்வத்தை துதித்தால் உனக்கு துயரம் நீங்குகிறதோ அந்த தெய்வத்தையே துதித்து விடு என்று சொல்கிறது.

ஆகவே எவனொருவன் ராம நாமத்தை சொல்லிக் கொண்டே இருக்கிறானோ, எவனொருவன் ராமர் பாதத்தை விடாமல் பற்றிக் கொண்டிருக்கிறானோ அவன் பல துன்பங்களுக்கு இடையே வாழ்ந்தாலும், கவலையில்லாமல் இரவு முழுவதும் உறங்கி விட்டு காலையில் தனக்கு புகலிடம் அந்த ராம பிரானே என்று அடைக்கலமாகி விடுகிறான். ஸ்ரீ ராமனும் அவன் துன்பத்தைப் போக்குகிறான்.



ஸ்ரீ ராம நாமத்தை சொல்லிக் கொண்டே போ... காட்டுக்குள் புலி உன்னைக் கண்டாலும் அப்படியே பதுங்கி விடும், படுத்து விடும். படமெடுக்கும் பாம்பு கூட பெட்டிக்குள் முடங்கி விடும். பாய்ந்து வரும் சிறுத்தை கூட உன்னைப் பார்த்துப் பயந்து ஓடி விடும்.

"ஸ்ரீ ராம ராமேதி ராம ராமே
மனோரமே
ஸஹஸ்ர நாம தத்துல்யம் ராம நாம
வரானனே" □

தொகுத்தவர்:-
இ.சுந்தரேஸ்வரக் குருக்கள்
மருதனார்மடம் ஆஞ்சநேயர்
ஆலய ஆதீன கர்த்தா

# இலவச ஆயுள்வேத வைத்திய முகாம்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு பகுதிகளான மணற்காடு, குடத்தனை, அம்பன் ஆகிய பகுதிகளிலுள்ள மக்களின் நன்மை கருதி குடத்தனை உப அலு வலகத்தில் மாதத்தில் வரும் முதல் புதன்கிழமையும் 3ஆவது புதன்கிழமையும் பருத்தித்துறை பிரதேச சபையினரால் இலவச ஆயுள் வைத்திய முகாம் நடத்தப் படவுள்ளது. (ஓ-35)

# அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல எச்சரிக்கை

(கொழும்பு)

புலிகளின் பிரிவினை வாதத்துக்கு ஆதரவாக இலங்கை ஊடகவியலாளர்களைப் பயன்படுத்தி சர்வதேச ரீதியில் பிரசாரம் மேற்கொண்டுவரும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தேசிய பாதுகாப்புக்கான ஊடகப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

நாட்டின் பாதுகாப்பு நிலைவரம் குறித்து தகவல் வழங்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் காலை தேசிய பாதுகாப்புக்கான ஊடக் மத்திய நிலையத்தில் நடைபெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார். இங்கு அமைச்சர் மேலும் கூறியதாவது,

பெனோஸ் என்ற பெயரில் இயங்கும் அரச சார்பற்ற நிறுவனம் புலிகளின் பிரிவினை வாத நடவடிக்கைகளுக்கு நேரடி உதவி வழங்கியுள்ளமை இப்போது சந்தே கத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது.

துரதிஷ்டவசமான இலங்கை ஊடகவியலாளர்கள் சிலர் இதில் சம்பந்தப்பட்டுள்ளனர். புலிகளுக்கு ஆதரவாக அவர்களால் எழுதப்பட்ட பல கட்டுரைகள் எம்மிடம் சிக்கியுள்ளன இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார். (ஓ-5)

# சாதனை வெற்றியை நோக்கி இந்தியா தொடரை சமன் செய்ய நியூசிலாந்து தீவிரம்



(வெலிங்டன்)

தோனி தலைமையிலான இந்திய அணி புதிய வரலாறு படைக்க காத்திருக்கிறது.

இன்று வெலிங்டனில் ஆரம்பமாகும் மூன்றாவது டெஸ்டில் வெற்றி பெற்றால் 41 ஆண்டுகளுக்கு பின் நியுசிலாந்து மண்ணில் டெஸ்ட் தொடரை கைப்பற்றி சாதிக்கலாம்.

இம் முறை எகிறும் ஆடுகளம், நடுங்க வைக்கும் குளிர்ந்த காற்று போன்றவை இந்திய வீரர்களுக்கு பெரும் சவாலாக அமையும்.

நியூசிலாந்து சென்றுள்ள இந்திய அணி 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.

முதல் டெஸ்டில் இந்தியா வென்றது.இரண்டாவது போட்டி சமநிலையானது.

இந்நிலையில் மூன்றாவது டெஸ்ட் இன்று வெலிங்டனில் உள்ள பேசின் ரிசர்வ் மைதானத்தில் ஆரம்பமாகிறது.

இங்குள்ள ஆடுகளம்வேகப் பந்து வீச்சுக்கு பெரிதும் கை கொடுக்கும்.

பந்துகள் அளவுக்கு அதிகமாக பவுன்ஸ்ஆகும். இந்த மைதானத்தில் இந்திய அணியின் செயற்பாடு அவ்வளவு திருப்தியாக இல்லை. இம் மைதானத்தில் கடைசியாக மோதிய நான்கு டெஸ்ட் போட்டிகளில் தோல்வியை சந்தித்துள்ளது.

இதில் 161, 121 என குறைந்த ஓட்ட எண்ணிக்கைகளுடன் சுருண்ட வரலாறும் உண்டு.

இங்கு கடைசியாக 1975இல் இந்தியா வென்றுள்ளது. தற்போது தோனியின் அணி 34 ஆண்டுகளுக்கு பின்னர் வெலிங்டனில் வெற்றிபெற காத்திருக்கிறது.

**வேகத்தின் எழுச்சி**

கடந்த காலங்களில் இந்தி அணியில் வேகப் பந்துவீச்சாளர்கள் பெரிய அளவில் சாதிக்க வில்லை.

இம் முறை சகீர்கான், இஷாந் சர்மா இணைந்து நியூசிலாந்து அணியை திணறடிக்கின்றனர்.

இவர்களது வேகத்தை சமாளிக்க முடியாமல் முதல் டெஸ்டில் 6 விக்கெட்டுக்கு 60 ஓட்டங்கள் எடுத்து தவித்தது. இரண்டாவது டெஸ்டில் 3 விக்கெட்டுக்கு 23 ஓட்டங்கள் எடுத்து தத்தளித்தது. தவிர சமீப காலமாக வேகப் பந்து வீச்சுக்கு ஏற்ற அடிலெய்ட், பெர்த், டிரினிடாட், ஓவல், காலே,ஜோகனஸ்பேர்க்,ஹமில்டன் போன்ற ஆடுகளங்களில் இந்திய அணி வெற்றி பெற்றுள்ளது.

இதனை உணர்ந்து வெலிங்டன் ஆடுகளத்தை நியூசிலாந்து கவனமாக அமைக்க வேண்டும். ஒரு வேளை வேகப் பந்து வீச்சுக்கு ஏற்ற வகையில் அமைத்தால் அது இந்திய அணிக்கு சாதகமாக அமையும்.

**வருகிறார் தோனி**

இத் தொடரில் இந்திய அணியின் துடுப்பாட்டம் அசுரபலத்துடன் காட்சி அளிக்கிறது. சச்சின் இது வரை 273 ஓட்டங்கள் குவித்துள்ளார்.

ஹமில்டன் டெஸ்ட் போட்டியை சமனிலை செய்ய காரணமாக இருந்த காம்பீர் (255 ஓட்டங்கள்), லக்ஸ்மன் (230), டிராவிட்(219) ஆகியோர் சிறந்த போர்மில் உள்ளனர்.

கடந்த போட்டியில் அரைச் சதம் கடந்த யுவராஜ் நம்பிக்கை தருகிறார். சேவாக் அதிரடி காட்டினால் மிகப் பெரும் இலக்கை எட்டலாம். காயம் குணமான நிலையில் இப்போட்டியில் அணித்தலைவர் தோனி களமிறங்குகிறார். இவரது வருகை அணிக்கு கூடுதல் பலம்.

தொடரில் 1:0 என முன்னிலையில் உள்ள இந்திய அணி வெலிங்டனில் வெற்றி பெற்றால் அல்லது சமனிலை செய்தால் நியூசிலாந்து மண்ணில் 41 ஆண்டுகளுக்கு பின் டெஸ்ட் தொடரை கைப்பற்றலாம். அதற்கு முன் பட்டோடி தலைமையிலான இந்திய அணி இங்கு 1967 -68 ல் டெஸ்ட் தொடரை வென்றது.

**ரைடர் நம்பிக்கை**

நியுசிலாந்து அணியில் வேகப் பந்து வீச்சை பலப்படுத்தும் வகையில்டிம் சவுத்திக்கு இம்முறைவாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

ஒரு நாள் போட்டிகளில் இவரது பந்து வீச்சில் இந்திய வீரர்கள் ரன் மழைபொழிந்ததால் பெரிய அளவில் பிரச்சினை இல்லை. கிறிஸ்மாட்டின் சிக்கல் தரலாம். அணித் தலைவர் விக்டோரி சுழலில் நெருக்கடி கொடுக்கலாம்.

துடுப்பாட்டத்தை பொறுத்த வரை கடந்த போட்டியில் இரட்டை சதம் அடித்த ஜெசி ரைடரை தான் அதிகம் சார்ந்துள்ளது. இவரைத் தவிர பிரண்டன் மக்குலம், ரோஸ் டெய்லரும் நம்பிக்கை தருகின்றனர்.


**இயற்கை கைகொடுக்கும்**

நியூசிலாந்து அணியின் துணைத் தலைவர் பிரண்டன் மக்குலம் கூறுகையில், இங்கு குளிர்ந்த காற்று பலமாக வீசுகிறது.

இதே நிலை நீடித்தால் எங்களுக்கு சாதகமாக அமையும் இந்திய வீரர்கள் வெயில் அடிக்க வேண்டுமென விரும்புவர்.


இயற்கை கைகொடுக்கும் பட்சத்தில் நெருக்கடி கொடுக்கலாம். நேப்பியர் டெஸட் போட்டியில் நியூசிலாந்து துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாக செயல்பட்டனர்.

இது அணியின் தன்னம்பிக்கையை அதிகரிக்கச் செய்துள்ளது. ஒரு நாள் தொடரில் டிம் சவுத்தி அதிக



ஓட்டங்களை விட்டுக் கொடுத்தது உண்மைதான். இவரை டெஸ்ட் போட்டியிலும் குறிவைக்க வாய்பில்லை என்றார்.

## மே.தீவுகள் வீரர்களின் பிரச்சினை தொடர்கிறது



மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் சபைக்கும் அதன் வீரர்களுக்கும் இடையிலான ஊதிய பிரச்சினை தொடர்ந்து நீடித்து வருகிறது. போட்டிக் கட்டணத்தை அதிகப்படுத்தி தரும்படி மேற்கிந்தியதீவுகள் வீரர்கள் வலியுறுத்தி வருகிறார்கள்.

இல்லாவிட்டால் இங்கிலாந்துக்கு எதிராக செயின்ட்லூசியாவில் இன்று நடக்கும் 5 ஆவது ஒரு நாள் போட்டியை புறக்கணிப்போம் என்று எச்சரித்திருக்கிறார்கள்.

இதையடுத்து இது தொடர்பாக சில பரிந்துரைகளை மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் சபை முன்வைத்தது. ஆனால், இவற்றினை ஏற்க மேற்கிந்திய தீவுகள் வீரர்கள் சங்கம் மறுத்து விட்டது.

இதனால் மேலும் சில சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்தப் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 90 சதவீதம் முழு வலுவுடன்களம் இறங்கும் என்று செயின்ட் லூசியா தேசிய கிரிக்கெட் சங்கத் தலைவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## பெய்லிஸின் பதவிக்காலம் நீடிப்பு

இலங்கை அணியின் பயிற்சியாளர் டிரவர் பெய்லிஸ் மற்றும் உதவி பயிற்சியாளர் போல் பப்ராஸின் பதவிக்காலம் 2011 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ண போட்டி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இருவரினதும் கடந்த கால நடவடிக்கைகளை கருத்தில் கொண்டு இந்த முடிபு எடுக்கப்பட்டதாக இலங்கை கிரிக்கெட் இடைக்கால சபையின் செயலாளர் நிஷாந்த ரணதுங்க தெரிவித்தார்.

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த டிரவர் பெய்லிஸ் கடந்த 2007 ஆம் ஆண்டு ஜுன் மாதம் இலங்கை அணியின் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார்.

அதேபோன்று 41 வயதான இங்கிலாந்தைச் சேர்ந்த போல பப்ராஸ் 2007 ஆம் ஆண்டு ஜுலை மாதம் தொடக்கம் இலங்கை அணியின் உதவி பயிற்சியாளராக செயற்பட்டு வருகிறார்.



## சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்... 52



**முன்னர் எழுந்த சர்ச்சை**

முரளிதரனின் பந்து வீச்சு கிரிக்கெட் பந்து வீச்சு விதி முறைகளுக்கு தவறானது என 1993ஆம் ஆண்டு இந்திய அணியுடனான தொடரின்போது ஐ.சி.சி போட்டி நடுவர் பீற்றர் பார்ஜினால் கூறப்பட்டது. எனினும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

பின்னர் 1995ஆம் ஆண்டு மார்ச் மாதம் நியூசிலாந்தில் நடைபெற்ற டெஸ்ட் தொடரின் போது ஐ.சி.சி போட்டி நடுவர் பாகி ஜார்மன் முரளிதரனின் பந்துவீச்சு முறையை ஒளிப்பதிவு செய்து (Vedio)சர்வதேச கிரிக்கெட் சபைக்கு அனுப்பினார்.

அத்துடன் ஐ.சி.சி பந்து வீச்சு விதிமுறைகளுக்கு முரணாக இருப்பதாக குறிப்பிட்டு போட்டி நடுவர் ஜார்மன் அனுப்பி வைத்த ஒளிப் பதிவு 1995 ஆம் ஆண்டு யூலை மாதம் நடைபெற்ற ஐ.சி.சி கூட்டத்தில் ஆராயப்பட்டது.


பாலா

எனினும் ஐ.சி.சி., முரளிதரனின் பந்து வீச்சு முறையின் ஒளிப்பதிவை வீரர்கள் சங்கத்துக்கு அனுப்பிவைத்தது. இதே வேளை 1995 ஆம் ஆண்டு ஒக்டோபரில் நடைபெற்ற சார்ஜா ஒருநாள் தொடரில் விளையாடிய போது நடுவர்களான ஹெயார், டூனி மற்றும் நியால் ஆகியோர் முரளிதரனின் பந்துவீச்சில் தவறு இருப்பதாக ஐ.சி.சி போட்டி நடுவர் ராமன் சுப்பாராவிடம் முறையிட்ட போதும்அம் முறைப்பாட்டை விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கும் பொறுப்பை இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாடு சபையிடம் (BCCSL) போட்டி நடுவர் ஒப்படைத்தார்.




(பயணிக்கும்)

## எண் விளையாட்டு-56



***போட்டிவிதிகள்:*** மேலிருந்து கீழ் தொடங்கும் வெள்ளைக் கட்டங்ளில் நிரப்பப்படும்எண்களின் கூட்டுத் தொகை, கட்டங்களின் மேல்புறத்தில் கொடுக்கப் பட்டுள்ள எண்ணுக்கு சமமாகவர வேண்டும். இடமிருந்து வலமாகசெல்லும் கட்டங்களுக்கும் இதே விதிதான். அக்கட்டங்களுக்கான கூட்டுத் தொகை இடப் புறம் கொடுக்கப்பட்டுள்ளது. 1 முதல் 9 வரையான எண்களை பயன் படுத்த வேண்டும். ஆனால் ஒருவரிசையில் பயன்படுத்தியஎண்திரும்பவரக் கூடாது.

### நேற்றைய பகுதிக்கான விடை



## யாழ்.சர்வோதயத்தினால் மிதிவெடி விழிப்புணர்வு நாளை அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் இலங்கை தேசிய சர்வோதய சிரமதான சங்கத்தின் யாழ்ப்பாணப் பிராந்தியத்தினால் மிதிவெடி விழிப் புணர்விற்கும் செயற்பாட்டுக்குமான சர்வதேச தினம் நாளை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள திரு மறைக் கலாமன்றத்தின் கலைத்தூது மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு இந் நிகழ்வு இடம்பெறும். (ந)

## புலிகளை 30..

விக்கிரமநாயக்க.

இது குறித்து சுதந்திரக் கட்சியின் கூட்ட மொன்றில் விக்கிரமநாயக்க பேசுகையில், விடு தலைப்புலிகளை அரைமணி நேரத்தில் மிகக் கொடூரமான முறையில் தாக்குதல் நடத்தி அழித்து விடக் கூடிய திறமை எங்களது படைக ளிடம் உள்ளது. ஆனால் இராணுவம் அப்படி செய்ய விரும்பவில்லை. காரணம் விடுதலைப் புலிகள் மனித கேடயங்களாக பிடித்து வைத் துள்ள அப்பாவி பொது மக்களை நாங்கள் கணக்கில் கொள்ள வேண்டியுள்ளது என பிரதமர் தெரிவித்தார். (எ-5)

## கொழும்பு...

அவர்களின் எதிர்காலம் தொடர்பாகவும் அர சாங்க உயர் அதிகாரிகளுடன் விரிவான முறை யில் ஆராய்வார் எனத் தெரிவிக்கப்படு கின் றது. எதிர்வரும் 6ம் திகதி வரையில் இலங் கையில் தங்கியிருக்கும் அவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ,அமைச்சர்கள், இடம்பெயர்ந் தவர்களுக்கான நிவாரணப் பணியில் ஈடுபட் டுள்ள ஐ.நாவின் தொண்டர் அமைப்புக்க ளின் பிரதிநிதிகள் உட்பட பொது அமைப்புக்க ளின் பிரமுகர்களையும் சந்தித்து பேச்சுக்க ளை நடத்துவார். வவுனியாவுக்கும் செல்ல திட்ட மிட்டுள்ள இவர் அங்குள்ள முகாம்களில் வைக்கப்பட்டுள்ள வன்னியில் இருந்து இடம் பெயர்ந்தவர்களை நேரில் சந்தித்து அவர்க ளின் பிரச்சினை தொடர்பாக ஆராய்வதற் கும் திட்டமிட்டுள்ளார். (எ-5)

## இலங்கை இனப்பிரச்...

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பில் அமெ ரிக்காவின் நிலைப்பாடு குறித்து மேரி ஜோர் கில் ரோய் கடந்த மார்ச் 9 ஆம் திகதி ஹிலாரி கிளின் டனிடம் கடிதம் மூலம் விளக்கம் கோரியிருந்தார்.

இதற்குப் பதிலளித்துள்ள ஹிலாரி கிளின் டன்,இலங்கையில் நிரந்தர சமாதான தீர்வு ஏற் பட்டு அனைத்து சமூகங்களும் ஏற்றுக் கொள் ளக் கூடிய தீர்வு ஏற்படுவதையே அமெரிக்கா விரும்புவதாகக் குறிப்பிட்டார்.

இலங்கை அரசாங்கத்திடம் சமாதான தீர்வை வலியுறுத்தும் அதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகளிடம் பொதுமக்களின் சுதந்திர நடமாட்டத் திற்கு அனுமதியளிக்குமாறும், வன்முறைகளை நிறுத்துமாறும் கோரியுள்ளதாக ஹிலாரி கிளின் டன் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவு டன் கடந்த மார்ச் மாதம் 13ஆம் திகதி தொலை பேசியூடாகத் தொடர்பு கொண்டு, பொதுமக்கள் தங்கியிருக்கும் பிரதேசங்கள் மீது படையினர் தாக்குதல் நடத்தக் கூடாது என்பதை வலியுறுத்திய தாகவும் தமது கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இடம்பெயர்ந்துள்ள மக்கள் தங்கி யுள்ள முகாம்களுக்கு சர்வதேச உதவு நிறுவ னங்கள், உதவி வழங்க அனுமதிக்கப்பட வேண் டும் என்பதையும் தாம் இலங்கை அரசிடம் வலி யுறுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.(எ-5)

## வன்னியில் 2 நாட்களில்...

ஆட்லெறி, பல்குழல் வெடிகணை, மோட்டார் மற்றும் பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள் ளப்பட்டன. கொல்லப்பட்டவர்களினதும் காயமடைந்தவர்களினதும் பெயர் விபரம் வெளியாகவில்லை.

இதேவேளை வன்னியில் நேற்று நடத்திய எறிகணைத் தாக்குதல்களில் 25 பொதுமக் கள் உயிரிழந்ததுடன் 56 பேர் காயமடைந் துள்ளனர்.

மக்கள் பாதுகாப்பு வலய பகுதிகளான மாத்தளன், அம்பலவன்பொக்கணை, வலை ஞர்மடம் மற்றும் இரட்டை வாய்க்கால் பகுதிக ளில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை தொ டக்கம் ஆட்லெறி,பல்குழல் வெடிகணை, மோட்டார் மற்றும் பீரங்கித் தாக்குதல்கள் மேற் கொள்ளப்பட்டன. கொல்லப்பட்டவர்களில் அடையாளம் காணப்பட்டோர் விபரம்;

சுந்தரலிங்கம் தர்சா(வயது16), காளிமுத்து குமாரதாஸ்(வலது 30), செபமாலை தாஸ் (வயது25), சீமான் மனோன்மனி (வயது51), நாகலிங்கம் தவம்(வயது32), திலகராசா சசி கரன் (வயது23), சுப்பிரமணியம் வசந்த மாலா (வயது32), இராசையா தனபாலசிங் கம் (வயது 53), தனபாலசிங்கம் பாஸ்கர் (வயது22), தனபாலசிங்கம் கோமளா (வயது 46), தவராசா வினோஜா (வயது22), மோகன் மயூரதன் (வயது07), பாக்கிய நாதன் தர்சினி(வயது10), சந்திரசேகரம் பொன்னம்மா (வயது45), கணபதிப்பிள்ளை தங்கராசா (வயது44), ,தங்கராசா தங்கலட் சுமி (வயது50), வல்லிபுரம் விவேகானந்தன் (வயது60), மான்பாலன் கிருத்திகா (வயது 12), செழியன் பிரதீபன்(வயது14), தேவன் சியாமளா (வயது11), காந்தி மரிஸ்ரலா (வயது 15), சண்முகன் தர்சன் (வயது14), மருதன் கனியின்பன்(வயது10),கேசவன் தேவநாயகி (வயது 29) ஆகியோரே உயிரிழந்தவர்கள் ஆவர். (எ-5)

## 22 லொறி...

அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவ் லொறிகள் இன்று யாழ்ப்பாணத்தை வந்தடையும் எனவும் அவர்குறிப்பிட்டார். கொழும்பில் இன்று இடம்பெறும் அரச அதிபர்களின் மாநாட்டில் கலந்து கொள்ள யாழ். அரச அதிபர் க.கணேஷ் கொழும்பு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-5)

## பட்டதாரிகளுக்கு யாழில் நேர்முகத்தேர்வு

(திருகோணமலை)

தேசியப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற் றிடங்களுக்கு பட்டதாரிகளை நிய மிப்பதற்கு மூன் றாம் கட்டமாக அழைக்கப்பட்டவர்களுக்கான நேர் முகப் பரீட்சை எதிர்வரும் 8ஆம் திகதி யாழ்ப்பாணத் தில் நடைபெறுவதாக வடக்கு மாகாண கல்விப் பணிப் பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார்.

இந் நேர்முகப் பரீட்சைக்கு யாழ்.மாவட்டத்திலி ருந்து அழைக்கப்பட்ட பட்டதாரிகளின் விபரங்கள் கடந்த 29ஆம் திகதி வலம்புரியில் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-5)

## பழமாத்தளன்...

தலைமையகம் தெரிவித்துள்ளது.

இத் தாக்குதல் சம்பவத்தையடுத்து அப் பகுதியில் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கை யின் போது ரி-56 ரக துப்பாக்கிகள் இரண்டை கடற்படையினர் கைப்பற்றியுள்ளதாகவும் இராணுவத் தலைமையகம் கூறியுள்ளது. (எ-14)

## கொழும்புக்...

கூட்டங்கள் எதிலும் கலந்து கொள்ள வேண் டாம் எனவும் அமைச்சர்களுக்கு அவர் கட்ட ளையிட்டார். பாதுகாப்புக்கான அச்சுறுத்தல் அதிகளவில் இருப்பதாலேயே இவ்வாறு தான் உத்தரவிடுவதாகவும் தெரிவித்தார். புலனாய் வுப் பிரிவினரின் இந்த எச்சரிக்கையைத் தொ டர்ந்து அமைச்சர்களின் நடமாட்டம் பெருமள விற்குப் குறைக்கப்பட்டிருக்கின்றது. குறிப் பாக இரவு நேரத்தில் நடமாடுவதையும் பொது நிகழ்வுகளில் கலந்து கொள்வதையும் அமைச் சர்கள் தவிர்த்துக் கொண்டுள்ளார்கள். (எ-1)

## வன்னி மக்களின் அவல...

நோர்வேயின் சர்வதேச அபிவிருத்திக்கான அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் வன்னியிலுள்ள மக்களின் நிலை தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசனுடன் நேற்று முன்தினம் தொலைபேசி யில் உரையாடியுள்ளார். இந்த உரையாடல் சுமார் 30 நிமிடங்கள் வரை நீடித்ததாக தெரி விக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பிரதானி புலித்தேவன் இது தொடர் பில் தமிழ்நெற் இணையத்தளத்திற்கு தெரிவித் ததாவது, தமிழர் பிரச்சினையின் தற்போதைய நிலை தொடர்பாகவும், ஐக்கிய நாடுகளின் பாது காப்புச் சபையில் இலங்கையின் நிலைவரம் தொடர்பாக பேசப்பட்ட பிந்திய நிலைகள் தொடர் பாகவும் உரையாடப்பட்டுள்ளது.

இந்த உரையாடலின்போது இலங்கை நிலை வரம் தொடர்பில் சர்வதேசத்தின் நிலை குறித்து சொல்ஹெய்ம் விளக்கமளித்தார்.

சர்வதேச சமூகம் இலங்கையில் தமிழ் மக் கள் கொல்லப்படுவதை தடுக்க முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக சொல்ஹெய்ம் இதன் போது தெரிவித்துள்ளார். அதேநேரம் நடேசனும் தமிழர் படுகொலைகள் குறித்து தகவல்களை வழங்கியதாக புலித்தேவன் நேற்றுக்காலை குறிப்பிட்டார்.

நாள்தோறும் வன்னியில் சிறிய நிலப் பரப் புக்குள் கட்டுண்டுள்ள சிறுவர்கள், பெண்கள் உட்பட நூறு பொதுமக்கள் வரை படையினரின் தாக்கு தல்களில் கொல்லப்படுவதாக நடேசன் இதன்போது குறிப்பிட்டார்.

இந்நிலையில் கொலைகளை நிறுத்தி உடன டியாக யுத்த நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளவேண்டும் என நடே சன் சொல்ஹெய்மிடம் வலியுறுத்தினார்.

அத்துடன் தமிழர்கள், இலங்கை அரசாங் கத்தின் அடக்குமுறையின் கீழ்வாழ விரும்ப வில்லை என்றும் அவர்கள், தமிழர் தேசம் என்ற அபிலாஷையுடன் வாழவிரும்புகிறார்கள் என வும் தெரிவித்த நடேசன், இதற்கு சர்வதேச முனைப்புகளை மேற்கொள்ளவேண்டும் என சொல்ஹெய்மிடம் தெரிவித்துள்ளார். (எ-5)

## வன்னிப் போரில் சிக்கியுள்ள...

வன்னியின் தற்போதை நிலைமை தொடர்பா கவும், இந்த மனிதாபிமானப் பிரச்சினை யைக் கையாள்வதில் பிரித்தானிய அரசாங் கம் எடுத்துள்ள நடவடிக்கைகளையும் விளக்கி உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். இந்த உரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

வடபகுதியில் அரச படையினருக்கும் விடு தலைப் புலிகளுக்கும்இடைநில் நடைபெறும் போரின் பிடியில் சிக்கியுள்ள மக்களின் நிலை தொடர்பாகவே நாம் அதிகளவு கவனத்தைச் செலுத்த வேண்டியவர்களாகவுள்ளோம்.

இந்த ஆபத்தான இடத்தில் இருந்து பாது காப்பான இடத்துக்கு அவர்கள் மாற்றப்படு வது அவசியம்.

தை மாதத்தில் இருந்து இடம்பெயர்ந்தவர் களில் 60 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் போர் இடம்பெறும் பகுதிகளில் இருந்து வெளி யேறி அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக் குள் வந்திருக்கின்றார்கள்.

கடந்த ஒருவார காலப் பகுதியில் மட்டும் 10 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் இவ் வாறு வெளியேறியிருக்கின்றார்கள்.

இருந்தபோதிலும் போர்ப் பகுதியில் மேலும் ஒரு இலட்சத்துக்கும் அதிகமானவர் கள் இருப்பதாக நம்பகரமான தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர்கள் கடந்த 18 மாத காலத்தில் பல தடவைகள் இடம்பெயர்ந்திருப் பதுடன், தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் போரினால் அச்சத்துடனேயே வாழ்ந்து வரு கின்றனர்.

பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத் தப்பட்ட பகுதிகள் உட்பட போர்ப் பகுதிகளில் நாளாந்தம் பொதுமக்கள் கொல்லப்படுவது தொடர்பான நம்பகரமான தகவல்கள் கிடைத் துக் கொண்டேயிருக்கின்றது.

பொதுமக்கள் கொல்லப்படுவதை நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன், பொதுமக்க ளுக்குப் பாதிப்புக்கள் ஏற்படாமல் இருப்பதை உறுதிப்படுத்துமாறு சம்பந்தப்பட்ட தரப்பின ரை நாம் கேட்டுக் கொள்கின்றோம்.

சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களின் கீழ் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பொதுமக்க ளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்ற தமது கடமைப்பாட்டை இலங்கை அர சாங்கமும் விடுதலைப் புலிகளும் மதித்து நடந்து கொள்ள வேண்டும்.

போர் நிறுத்தத்தினை செய்து கொள்ள வேண்டும் என பிரதமர் ஜனவரி 14ஆம் திகதி கோரிக்கை விடுத்திருந்தார். அன்று முதல் நானும் பல்வேறு சந்தர்ப்பங்களில் இதே கோரிக்கையை முன் வைத்திருந்தேன். இப் போதும் மனிதாபிமான அடிப்படையில் போர் நிறுத்தத்தினைச் செய்துகொள்ள வேண்டும் என்ற கோரிக்கையையே நாம் முன் வைக் கின்றோம்.

மனிதாபிமானப் பிரச்சினையில் ஒரு முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கும்,பிரச்சி னைக்கு உறுதியான ஒரு தீர்வைக் காண்ப தற்காகவுமே இலங்கைக்கான சிறப்புத் தூது வர் ஒருவரை எமது பிரதமர் நியமித்தார்.

இந்தத் தூதுவருடன் தமது அரசாங்கம் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளும் என இலங்கை ஜனாதிபதி முதலில் உறுதியளித்தி ருந்த போதிலும் அந்த நியமனத்தை இலங் கை அரசாங்கம் தொடர்ச்சியாக நிராகரித்து வருவது எமக்குப் பெரும் அதிருப்தியைதான் ஏற்படுத்தியிருக்கின்றது.

இந்த தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்யு மாறு அரசாங்கத்தை நாம் தொடர்ந்தும் கேட் டுக் கொள்கின்றோம் என அவர் தெரிவித்துள் ளார். (எ-5)

ANVIL
The seat of formal English
அன்விலின் ஆங்கில வகுப்புக்கள்
04.04.2009இல் ஆரம்பமாகின்றன.
1.சிறுவர்களுக்கான ஆங்கிலம் காலை 10.00 மணி
2.உயர் கல்விக்கான ஆங்கிலம் Formal English For Higher Studies -பகல் 01.00 மணி
3.ஆங்கில கடிதம் எழுதும் பயிற்சி வகுப்பு- மாலை 4.00 மணி
Modern Letter Writing Course.
4.ஏற்கனவே அன்விலில் கற்றுத் தேறிய மாணவர்களுடனான நேர்காணல்.
-காலை 10.00 மணி
ARASADY AMMAN VEETHY,
THIRUNELVELY NORTH.
அரசடி அம்மன் வீதி,
திருநெல்வேலி வடக்கு.
(2475)

## கண்ணீர் அஞ்சலி

புலோலி தெற்கு, துறையாமூலை முருகன் வெதுப்பக உரிமை யாளரும், யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் வட மராட்சிக் கிளைத் தலைவரின் சகோதரருமான

**நடேசு சுந்தரமூர்த்தி**

அவர்களின் திடீர் மறைவையடுத்து சோகத்தில் ஆழ்ந்திருக் கும் அன்னாரது குடும்பத்தினரின் சோகத்தில் நானும் பங்கு கொண்டு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வ துடன் அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறேன்.

உரிமையாளர்
*ராஜன் வெதுப்பகம்,*
*கதிரவேற்பிள்ளை வீதி,*
*தம்பசிட்டி, பருத்தித்துறை.*

மா.சண்முகநாதன்
*செயலாளர்*
*யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர்*
*சங்க வடமராட்சி கிளை.*

(C-2266)


அலை அலையாய் மக்கள்... மலை மலையாய் துணி மணிகள்...
சகல விதமான உடுப்புக்களையும்
அள்ளிக் கொள்ள
மாபெரும் மலிவு விற்பனை!
லிட்டில் இந்தியன் பெஷன்
77,பெரிய கடை, யாழ்ப்பாணம்.

(C-2265)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.04.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.